விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 புரட்டாதி 12 ஸபர் பிறை 4 இதழ் 213

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28-9-1987

## டிக்ஸிற்றுடன் நடத்திய பேச்சுக்கள் மாவட்டத் தலைவர்களுடன் பிரபாகரன் ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு.வே. பிரபாகரனுசகும் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற்றுக்குமிடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து ஆலோசனை நடத்த புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனால் மகாணத்தலைவர்கள் அவசரமாக நேற்று அழைக்கப்பட்டனர்.

கிழக்கு மற்றும் மன்னார் வவனியா மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர்கள் நேற்று இந்திய விமானப்படை விமானங்கள்மூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் திரு. டிக்ஸிற்றுக்கும் திரு. பிரபாகரனுக்குமிடையே ஐந்து அம்சக் கோரிக்கை சம்மந்தமாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளை ஆராய்வதற்கே நேற்றுபுலிகள் இயக்க மாகாணத் தலைவர்கள் யாழ் நகர் அழைக்கப்பட்டிருந்தனர்.

(9ம் பக்கம் பார்க்க)

# ● இந்திய அரசு உருப்படியான நடவடிக்கை எடுத்திருந்தால் திலீபன் உயிர்பிழைத்திருப்பான்

## தியாகமரணம் குறித்து பிரபாகரன்

(யாழ்ப்பாணம்)

**"இந்திய அரசு எமது நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து காலம்தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைளை எடுத்திருந்தால் திலீபன் உயிர்பிழைத்திருப்பான். நாம் கேட்டுக்கொண்டபடி ஓர் இடைக்கால அரசை நிறுவி எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை தீர்த்துவைப்பதில் சிரத்தை காட்டுவதைவிடுத்து எமக்கு நிபந்தனை விதிக்கிறது. மக்களின் ஒன்றுதிரண்ட சக்தி மூலமும், ஏகோபித்த எழுச்சி மூலமுமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம்" என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே பிரபாகரன் திலீபனின் தியாக மரணம் குறித்து விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.**

அச்செய்தியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது;

"எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது இவை எல்லாம் எமது ஆயுதப்போராட்ட வரலாற்றில நாம் ஈட்டிய வீரசாதனைகள். ஆனல் எமது அன்பான தோழன் திலீபனின்தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது சாத்வீகப் போராட்ட களத்தில் தன்னைப் பலிகொடுத்து ஈடுஇணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான் அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழ தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டை தலைகுனிய வைத்த நிகழ்ச்சி உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மககள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது?

திலீபன் உங்களுக்காக இறந்தான், உங்கள் உரிமைக்காக இறந்தான், உங்கள் மண்ணுக்காக இறந்தான், உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காக தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த, உன்னத தியாகத்தை செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன் இலட்சிய உறுதியின் உச்சக் கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான். அவன்

(9ம் பக்கம்பார்க்க)

## பருத்தித்துறையில்

[பருத்தித்துறை]

சாகும்வரை உண்ணாவிரதமிருந்து வீரமரணமடைந்த லெப்டினன் கேர்ணல் திலீபனின் பூதவுடல் பருத்தித்துறைக்குக் கொண்டுவரப்பட்டபோது பெருந்திரளானமக்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## 10 பேர் உண்ணாவிரதம்

[பருத்தித்துறை]

தமிழீழ விடுதலைப்புலிகளின் சாகும்வரை உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து பருத்தித்துறைபொதுமக்களில பத்துப்பேர்தொடர்ந்துமூன்று நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பருத்தித்தறை பஸ்டிப்போவின் முன்னுலுள்ள மருதடி கந்தசுவாமி ஆலயத்திலேயே இந்த பத்துப்பேரும் உண்ணாவிரதம்இருக்கின்றனர் இவாகள் சனிககிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க காப்டன் அமரர் ரஞ்சன் லாலாவின் தந்தையார் அ. கனகநாயகம்

(10ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றக் கட்டிடம் தீ வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற கட்டிடங்களுக்குள் புகுந்த சிலர் தீவைத்து சேதப்படுத்தியுமுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது

நீதிமன்றக் கட்டிடங்களுக்குள் தீவைக்கப்பட்டதால் அங்கிருந்த தஸ்தாவேஜுகளும் தளபாடங்களும் எரிந்து சாம்பலாகின.

### சில இடங்களில் வன்செயல்கள்

யாழ். மாவட்டத்தின் சில இடங்களில்சிறுசிறு வன்செயல்

(9ம் பக்கம் பார்க்க)

## "திலீபனின் மரணத்தை கேட்டு மேலும் உறுதியடைந்துள்ளேன்!"

—முல்லை. உண்ணாவிரதி திருச்செல்வம்

(யாழ்ப்பாணம்)

"திலீபனின் தியாக மரணத்தை அறிந்திருந்ததிலிருந்து நான் எனது இலட்சியத்தில் மேலும் உறுதியடைந்துள்

( 9ம் பக்கம் பார்க்க]

## திலீபன் மரணச்செய்திகேட்டு வலி. வடக்கில் உணர்ச்சி வெள்ளம்!

[பலாலி]

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப்பொறுபாளர் இ. திலீபனின் மரணச்செய்தி கேட்டு, வலிவடக்கு பகுதி மக்கள் கதறி அழுதனர், உணர்ச்சி வேகத்தால் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பலாலி, காங்கேசன்துறை, தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், ஏழாலை, வசாவிளான் ஆகிய பகுதிகள் சோகமயமாக காட்சியளிப்பதுடன் மிகஉயரத்தில் கறுப்புக் கொடிகள் பறப்பதுடன் சந்தி

(10ம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரம் சிறையில் ஈரோஸ்' போராளி

[யாழ்ப்பாணம்]

ஈழப்புரட்சியமைப்பைச் [ஈரோஸ்] சேர்ந்த மன்னார்ப் பகுதி இராணுவ பொறுப்பாளர் அருள்என்பவரை இந்திய

[10ம் பக்கம் பார்க்க]

## திலீபனின் தியாக மரணத்தால் யாழ். குடாநாடு சோகத்தில் மூழ்கியது!

### சுதுமலையில் இன்று இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

திலீபனின தியாக மரணத்தினல் யாழ். குடாநாடு நேற்று முற்ருக ஸ்தம்பித்து சோகத்திலாழ்ந்தது.

எங்கும் ஒரே சோகமயம். யாழ். வர்த்தகநிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன வாகன நடமாட்டமும் இருக்கவில்லை

குடாநாட்டின் பிரதான வீதிகள், குறுச்குவீதிகள், மூலைமுடுக்குகளெல்லாம் வாழை, தோரணங்கள் கட்டப்பட்டு தியாகச்சுடர் திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தியவண்ணமிருந்தனர்

(10ம்பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

சாத்வீக எதிர்ப்பு எல்லா முனையிலும் கூருடைய வாள். அது எதிரியையும், ஒரு சொட்டு ரத்தம் கூடச் சிந்தவிடாமல் வாழ்த்தும். அது துருப்பிடித்துவிடாது. அதனைத் திருடமுடியாது; யாரும் பறித்துவிடவும்முடியாது.

—மகாத்மா காந்தி

## நமது நோக்கு

### துணிந்த தியாகம்!

"பீரங்கிக்குப் பின்னால் இருந்து கொண்டு சுட்டு, மற்றவர்களைச் சிதற அடிப்பது வீரமா? அல்லது புன்முறுவல் பூத்த முகத்துடன் பீரங்கியை அணுகி சுக்கலாகிச் சிதறுண்டுபோவது வீரமா?

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உண்மையான போர்வீரன் யார்?

சாவை எப்பொழுதும் தனது ஆப்த நண்பனாக வைத்துக் கொண்டிருப்பவனோ அல்லது மற்றவர்களின் மரணத்திற்கு வழி செய்கிறவனோ?"

'வீரமோ அல்லது மனிதத்தன்மையோ இல்லாதவன் என்றுமே சாத்வீக எதிர்ப்பாளனாக இருக்கமுடியாது இதை நம்புங்கள்''

இந்த விண்ணப்பத்தை என்றும் விடுப்பவர் வேறு யார்?

மகாத்மாகாந்திஎன்பதை எந்தத்தமிழனும்அறிவான். அஹிம்சை என்ற உயர்ந்த தத்துவம், மகாத்மாகாந்தியின் கண்டுபிடிப்பல்ல; இந்தியாவில் அவதரித்த புத்தபிரானும், தமிழ்நாடு உலகுக்களித்த தெய்வப்புலவர் திருவள்ளுவரும் போதித்த தத்துவம்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இத்தத்துவத்தை வெற்றிபெறச் செய்தசாதனையே மகாத்மா காந்தியின் தனித்துவப் பெருமை.

இன்று யாழ்ப்பாணம் அதனை உலகுக்கு வழங்கும் சாதனை இதுவென்பதால் நாம் இந்தப் பின்னணியைக் குறிப்பிட்டோம்.

திலீபன் என்று அழைக்கப்படும்பார்த்தீபன் உண்ணாவிரதமிருந்துஉயிர் நீத்தவரலாற்றில் "நான் மரணத்தை நேசிக்கிறேன்" என்ற வசனம் காணப்படுகிறது இந்த வசனம் மகாத்மா காந்தியின் வரலாற்றில் அடிக்கடி காணப்படுகிறது.

மரணம் உண்மையில் ஒரு நண்பன் என்ற கருத்துறுதியில்லாத எவரும், தொண்டைக் குறிக்கோளாகக் கொள்ளமுடியாதென்பது காந்தியின் திடமான கருத்து.

திலீபன் எங்கே சாந்தி எங்கே? என்று வாதிடுபவர்களே அவருடைய உண்ணாவிரதத்தைப் பார்த்து பரிதாபங்கொண்டவர்கள்.

மாணவ பருவத்தில் இரவில் பேய் பிசாசுகளைக் கண்டு பயந்து நடுங்கிய காந்தி, லண்டனில் பாரிஸ்டராக முதன்முதல் பேச ஆரம்பித்து, ஒன்றுமே பேச முடியாது ஆசனத்தில் அமர்ந்த காந்தி காலகதியில் அஞ்சாமையில், சொல்வன்மையில் உலகில் முதலிடம் பெற்றார்.

திலீபன் ஆரம்பித்த உண்ணாவிரதம் மரணத்தில் முடியுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை; ஆனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தினமும் கூடியபோதும், பரிதாபமே அவர்கள் உணர்வாயிருந்தமை, ஆன்மபலத்தில் நாம் நெடுந்தூரம் போகவேண்டுமென்பதைப் புலப்படுத்தியது

திலீபன் போன்ற ஆன்மவீரர் இன்று எங்களுக்குப் பலர் தேவை. குறிப்பாக நாம் இதனை வற்புறுத்துவதற்கு முக்கிய காரணம் உண்டு.

புயபலத்திலும் படைபலத்திலும் தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் உலக வரலாற்றிலேயே தக்கஇடம் பிடித்துவிட்டனர்.

படைச்செருக்கும், பகைவரைக் கொன்றுகுவிக்கும் வீரமும் உண்மை வீரமாகாது போர் ஒழிக்கப்படவேண்டிய சாதனம் என்ற கருத்து வலுவடைகின்றது இது தமிழரைப் பொறுத்தமட்டில் ஒரு புதுமையான கருத்தல்ல.

இதற்கு மீண்டும் சாட்சியமளிப்பவர் மகாத்மா காந்தி: "இந்தப் போராட்டத்தில் தமிழரின் சாதனையைப்போல வேறு எந்த இந்திய சமூகத்தினரும் அவ்வளவு செய்யவில்லை. ஆகவே அவர்களின் அழகிய இனிய மொழியைக் கற்கலானேன்"

விடுதலைப்புலிகள் 'கொலைகாரர்' என்ற வசை நீண்டகாலம் பாடப்பட்டது ஆயுத ஒப்படைப்பு இதற்கு ஆப்புவைத்தது

போராட்டம் பாதை மாறவேண்டியிருந்தது. பகைவரைக் கொல்லும் திறன், தன்னுடைய உயிரைப் பணயம் வைக்கும் திறனாக மாறியது.

அம்மாற்றத்தின் தந்தை என்றும் அழியாப்புகழுடைய திலீபன் உணர்ச்சிவயப்பட்டபோது கோழையினிடமும் வீரம் பிறக்கும்; ஆனால் தமிழரின் உயிர்த்தியாக முறையாகிய வடக்கிருத்தலை ஒருசிலரிடம் காண்பதும் அரிது.

அத்தகைய வீரனே திலீபன் அவருடைய மரணம் மக்களுக்கு கவலைஅளித்தபோதும். அது எவ்வகையிலும் பரிதாபத்துக்குரிய நிகழ்வல்ல; விடுதலை இயக்கத்துக்கு ஒரு புதிய பாதை வகுக்கும் தியாகம்.

# திலீபன் எனும் தியாகச்சுடர்

நாற்பது லட்சம் ஈழத் தமிழர்களுக்காக தன்வாழ்வை அர்ப்பணித்தார் தியாகசுடர் திலீபன். உலகில் தமிழினம் இருக்கும்வரை அவர்நாமம் நிலைத்துவிட்டது. உரிமைக்காக உப்புநீர்கூட அருந்தாது உண்ணாவிரதத்தின் மூலம் உயிர்விட்ட ஒரேஒரு ஈழத்தமிழன் என்ற பெயர் உலகவரலாற்றிலே இடம்பெற்றுவிட்டது.

## ஒரு செய்தியாளர் பார்வையில்

எவருமே நினைத்துப் பார்க்க முடியாத செயல். நாவறண்டு, நரம்புகள் மடிந்து, நாடித் துடிப்பு நாளாந்தம் குறைந்து, நலிந்து மெலிந்து, உடல் உருக்குலைந்து உருகிஉருகி உயிர்விட்டார். உடல்கறுத்து, தலை விறைத்து, உணர்வுகள் ஒவ்வொன்றாக இழந்து, குடல் சுருங்கி, நிலைதழும்பி குரல் குறைந்து, விரல் சுருண்டு உயிர்விட்டார் கடல்அலையென மக்கள்வெள்ளம் காலைமாலை தினமும்வந்து உயிர் பிரியுமுன் அவரை ஒருமுறை தரிசித்து சென்றது.

இனிமையான சுபாவம்; அமைதியான போக்கு, உறுதியான பேச்சு. எதிரியைக்கூட தலைகுனியவைக்கும். வயதோ குறைவு; அறிவோ பெரிது, ஆற்றல் அதிகம் எடுத்த செயலை தொடுத்து முடிக்கும் திறமைமிக்கவர் திலீபன்

பத்திரிகையாளன் என்ற முறையில் எத்தனை சந்திப்புக்கள். எவ்வளவு உரையாடல்கள். எதனையும் மறக்கமுடியாது.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஒன்று அமைத்த போது அதில்அவர் ஆர்வம் காட்டினார் அக்கறை எடுத்தார். ஒற்றுமையை வலியுறுத்தி உரையாற்றினார் திலீபன். சங்கத்தின் பொதுக் கூட்டங்களில் பங்குபற்றி சங்கத்தின் வளர்ச்சிக்காக வழிவகை தெரிவித்தார்.

அண்மையில் கொட்டடி, நாவாந்துறை மக்களிடையே மோதல்கள் ஏற்பட்டன வாள் வெட்டு, கொத்து வன்முறை தலைதூக்கியது வீடு வாசல்கள் நாசமாகின. வந்து சேர்ந்தார் திலீபன். சமாதான மகாநாடு ஆரம்பமானது. இரு பகுதியினரும் தாக்குதல் பற்றியும் அதனால் ஏற்பட்ட தாக்கங்களைப் பற்றியும் பேசினார்கள். ஆறுமணிக்குமுன் ஆயுதங்களை ஒப்படையுங்கள் என திலீபன் அன்போடு கூறினார். நஷ்டஈடுபற்றி சிலர் பேசிய போது வார்த்தைக்கொரு தடவை 'அண்ணே அண்ணே' என்று அன்போடு அழைத்து அத்தனைபேரையும், மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போல் மௌனிகளாக்கிவிட்டார் 'ஆயுதம் ஒப்படைத்தால்தான் அமைதி ஏற்படும். அதனை முதலில் செய்யுங்கள். அதன்பின் நஷ்டஈடு நாசங்கள் பற்றிப் பேசலாம்' என்றார் திலீபன். அத்தனைபேரும் ஒத்துக்கொண்டனர் ஆயுதங்களுடன் வந்து சேர்ந்தனர் அடுத்த நாள் அங்கு அமைதி பிறந்தது. அனைவரும் உறவாடினர்.

கொழும்பிலிருந்து முஸ்லிம் குழு ஒன்று வந்து கூடிப்பேசினர். திலீபனுடன் "முஸ்லிம் பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துவோம்" என உறுதியளித்தார் திலீபன். குழம்பிய மனதுடன் வந்தகுழுவினர், குறைகளைத்தெரிவித்து; நிறைந்த மனதுடன் திரும்பினர். குற்றம் குறைகளைக் கேட்டு, சற்றும் நீதி குறையாமல் தீர்ப்பு வழங்குபவர் திலீபன்.

அப்போது அவர் மாணவனாகப் படித்துக்கொண்டிருந்தார். தேடிப்பிடித்து அழிக்கும் தீவிர வேட்டையில் ஈடுபட்டனர் இராணுவத்தினர் ஆஸ்பத்திரி வீதியில் ஒரு வீட்டில் வாடகைக்குச் சில நண்பர்களுடன் தங்கியிருந்தார் அவர். வந்து

**கா. யோகநாதன்**

விட்டனர் படைவீரர். முதலில் நண்பர்களைப் பின்பக்கத்தால் அனுப்பிவிட்டு, இறுதியில் தானும் தப்பிக்கொண்டார் வந்த படையினர் தேடுதலில் ஈடுபட்டு தோல்வியுடன் திரும்பினர் ஆபத்தான நேரத்திலும் அந்நியருக்கு அடிபணியாமல் தப்பிவிடும் திறமை ஆரம்பகாலத்திலே அவரிடம் குடிகொண்டு இருந்தது.

(9ம் பக்கம் பார்க்க)

# அஹிம்சைப் போரில் களப்பலியானமுதல்போராளி

இலங்கை - இந்திய அரசுத் தலைவர்களிடையே இனப்பிரச்னைத் தீர்வுக்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகி நாளையுடன் இரண்டு மாதங்கள் முடிவடைகின்றன. எனினும் இவ்வொப்பந்தவிபரம்பற்றி இன்னும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுமில்லை, பாராளுமன்றம் இதற்கு அங்கீகாரம் வழங்கவுமில்லை. ஆனாலும் ஒப்பந்தத்திலுள்ள விடயங்கள் பல வடக்கு - கிழக்கில் அமுலாகிவிட்டன.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வருகை தந்ததும் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்ததும், தமிழ்ப் போராளிகளிடமிருந்து ஆயுதங்கள் பெறப்பட்டதும், இந்தியாவில் தமிழ்ப் போராளிகளின் பல முகாம்கள் மூடப்பட்டு வருவதும், அங்குள்ள அகதிகள் இங்கு திருப்பியனுப்பப்பட்டு வருவதும் இடம்பெற்றுமுள்ளது; இடம்பெற்றும் வருகின்றது இத்துடன் தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை அமுல்படுத்தும் முயற்சிகளிலும் இலங்கையரசு இறங்கியுள்ளது

புனரமைப்பு, மீள் குடியேற்றம் என்ற போர்வையில் தமிழ்ப் பகுதிகளில் துரித சிங்களக் குடியேற்றம் ஒப்பந்தம் கைச்சாத்தாகி இதுநாள்வரையில் துரிதமாக இடம்பெற்றுள்ளதை பத்திரிகைகள் புள்ளிவிபர ரீதியில் வெளியிட்டுள்ளன இதுவிடயத்தில் இலங்கையரசு தீவிரமாக இறங்கியிருப்பது தமிழர் தரப்பில் பலமாகக் கண்டிக்கப்பட்டுவருகின்றது எனினும் ஒப்பந்தத்தில் தமிழர் தரப்பில் கைச்சாத்திட்ட இந்திய அரசு மௌனம் சாதித்து வருவதுடன் அவ்வாறான நடவடிக்கைகள் இடம் பெறவில்லையென்றும் கூறியுள்ளது.

வடக்கு - கிழக்கில் இழந்த சிவில்நிர்வாக நடவடிக்கையை மீளமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் இலங்கையரசு இதற்கமைய சில இடங்களில் இராணுவ முகாம்களை அகற்றி பல பொலிஸ் நிலையங்களை இராணுவ பலத்துடன் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்தாகிக் குறித்த தினங்களில் வடக்கு-கிழக்கிலிருந்து அவசரகாலச் சட்டம் நீக்கப்படும்; சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலுமுள்ள தமிழ்க் கைதிகளனைவரும் விடுவிக்கப்படுவரெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாம். எனினும் இதுவரை அவசரகாலத் தடைச் சட்டம் நீக்கப்படவுமில்லை சிறைக் கைதிகளனைவரும் விடுதலைசெய்யப்படவுமில்லை. மாறாக இரண்டும் தொடர்ந்தும் அமுலிலுள்ளது.

தமிழ்ப் போராளிகளிடம் ஆயுதங்களைக் கைப்பற்றியது போல் ஊர்காவற்படைகளிடமிருந்தும் ஆயுதங்கள் கைப்பற்றப்படவேண்டுமென்றும், இப்படை கலைக்கப்படுமெனவும் ஒப்பந்தம் கூறுகிறது எனினும் இதுவரையில் கிழக்குப் பகுதிகளில் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற சில வன்முறைச் சம்பவங்களில் இப்படையினர் ஆயுதபாணிகளாக ஈடுபட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன. படையும்

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று பாராட்டு விழாவும் பஞ்சாக்ஷரம் நூல்வெளியீடும்

[கோப்பாய்]

'மறுமலர்ச்சி' எழுத்தாளர் பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மாவின் எழுபதாண்டுநிறைவையொட்டி கோப்பாயில் பாராட்டு விழா இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறும்.

இவ்விழாவை கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலன சபையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆலயத்தில் நடக்கவுள்ள விழாவில் பண்டிதர் ச பஞ்சாட்சரசர்மாவின் ஆக்கங்களையும் பணிகள் பற்றிய விபரங்களையும் தொகுத்து "கோப்பாய் சிவம்" அவர்களால் வெளியிடப்பட்ட "பஞ்சாக்ஷரம்" என்ற நூல் அறிமுகம் செய்துவைக்கப்படும்.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் சு. இராமலிங்கம் விழாவிற்குத் தலைமை வகிப்பார் சிவஸ்ரீ சு. இராசேந்திரக் குருக்கள், திருமதி வசந்தா வைத்தியநாதன், க ச முத்துவேல்ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவார்கள். நூல் அறிமுக உரையை திரு அ பஞ்சாட்சரம் ஆற்றுவார் பண்டிதர் ச. சுப்பிரமணியம் பாராட்டுப்பத்திரம் வாசித்தளிக்க திரு. செ சுப்பிரமணியம் சர்மாவிற்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்.

### நவராத்திரி: இலக்குமி துதி

மல்லல்நெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
தனிபுரக்கும் மன்னர்யாரும்
கல்வியினில் பேரறிவிற் கட்டழகில்
நிகரில்லாக் காட்சியோரும்
வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையும் அணியிழை நின்
அருள்நோக்கம் அடைந்துளாரே.

காசிகாண்டம்

### வளைகுடாவிலோ ஏனைய பகுதியிலோ

# ஈரான் தாக்கினால் பதிலடி கிடைக்கும்

## அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன், செப் 27


**வளைகுடாவிலோ அல்லது ஏனைய பகுதிகளிலோ ஈரான் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அமெரிக்காவின் பதில் தாக்குதல் கடுமையாக இருக்குமென அமெரிக்க பாதுகாப்பமைச்சர் திரு. கெஸ்பர் வெயின் பேகர் எச்சரிக்கை விடுத்துள்ளார். எனினும் அமெரிக்காவின் செயலுக்கு அது விரைவில் வருந்த வேண்டிய நிலை ஏற்படுமென்றும் ஈரான் தெரிவித்துள்ளது**

வளைகுடாவில் அண்மையில் ஈரானிய கப்பலொன்றை அமெரிக்க ஹெலிகாப்டர் தாக்கி மூழ்கடித்ததில் அதிலிருந்த ஈரானியர் மூவர் கொல்லப்பட்டதுடன் 26 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் இதையடுத்து வளைகுடாவில் ஈரான் ஈராக்கிற்கிடையிலான முறுகல் நிலை தளர்ந்து ஈரான்-அமெரிக்க யுத்தநிலை தோன்றியுள்ளது

அமெரிக்காவின் இச்செயல் தொடர்பாக ஐ நா சபையில் ஈரான் ஜனாதிபதி அண்மையில் உரையாற்றிய போது இச் செயலை வன்மையாகக் கண்டித்ததுடன் இதற்காக அமெரிக்கா நிச்சயமாக வருந்த வேண்டிய நிலை ஏற்படுமென்றும் எச்சரித்தார்.

ஈரானின் இவ் எச்சரிக்கையையடுத்தே வளைகுடா சென்றுள்ள அமெரிக்க பாதுகாப்பமைச்சர் கெஸ்பர் வெயின் பேகர் ஈரான் தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா பதிலடி கொடுக்கத் தயங்காதெனவும் எச்சரித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்கக் ஹெலித் தாக்குதலில் வளைகுடாவில் பலியான 3ஈரானியர்களின் சடலங்களையும் கைதான 26 மாலுமிகளையும் அமெரிக்கா ஓமானிலுள்ள துறைமுகமொன்றில் வைத்து ஈரானிய அதிகாரிகளிடம் கையளித்துள்ளது. [சி]



## வீர மறவனுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

திரு. திலீபனின் மரணம் குறித்து ஈழவர் முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்பிரிவுப் பொறுப்பாளர் திலீபனின் மரணச்செய்தி அறிந்து துயரடைகிறோம்.

ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டுவிட்ட பின்னரும் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை முன் வைத்து 5 அம்சக் கோரிக்கை அடிப்படையில் சாத்வீக போராட்டத்தின்மூலம் உலகோரின் கவனத்தையும் அனுதாபத்தையும் பெற்றெடுக்க விளைந்து அதற்காகத் தன் உயிரையே விலையாகக் கொடுத்த வீர மறவனுக்கு வீரஅஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்

"வீரத்தழும்பைத் தன்னுடலில் ஏந்திக்கொண்டதால் தன் உடலில் ஏற்பட்ட பலவீனத்தையும் பொருட்படுத்தாமல் சாத்வீக போராட்டத்தில் முதற்பலியாகத்தன்னை அர்ப்பணிக்க முன்வந்த திலிபனின் தியாகம் புடம்போடப்பட்டது என்பதில் சந்தேகமேயில்லை".

## சுதுமலையில் இறுதி அஞ்சலி

[யாழ்ம்பாணம்]

தியாகச் சுடர் திலீபனின் பூதவுடல் இன்று திங்கட் கிழமை சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் பி. ப. 2 மணிமுதல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

6 அடி உயரம் 12 அடி அகலம், 20 அடி நீளமான மேடை அமைக்கப்பட்டு அதில்பொதுக் கூட்டம் நடைபெறவும், அதற்குப் பக்கத்தில் திலீபனின் பூதவுடல் வைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

கூட்ட மைதானத்தில் 50 அடி நீளமான பந்தலும் அமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (வா)

### "அமைதி முயற்சிக்கு இடையூறு விளையின்

## விடுதலைப் புலிகள் கொல்லப்படுவது தவிர்க்கமுடியாது போய்விடும்!"

— ரைம்ஸ் ஒவ் இந்தியா

[புதுடில்லி]

தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது கடைப்பிடித்து வரும் கொள்கைகளினால் வடக்கு-கிழக்கில் இந்திய இராணுவத்தினர் மேற்கொள்ளும் அமைதி நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகள் அங்கத்தவர்கள் கொல்லப்படும் சந்தர்ப்பம் தவிர்க்கமுடியாது போய்விடும் என இந்தியாவிலிருந்து வெளிவரும் பரபல ஆங்கில தினசரியான 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' தெரிவித்துள்ளது.

இலங்கையின் அமைதி நிலை பற்றி கடந்த 24ந் திகதி வெளிவந்த இப்பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ்வாசிரியர் தலையங்கம் குறிப்பிடுகையில்:

தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது இணங்காமை அல்லது விட்டுக் கொடுக்காமை போன்ற நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இது அமைதி நிலைநாட்டும் இந்திய இராணுவத்தினரின் நடவடிக்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். விடுதலைப் புலிகள் தமது ஆயுத ஒப்படைப்பை முழுமையாகச் செய்யவில்லையாதலால் அவர்களிடமிருந்து ஆயுதங்கள் பலாத்காரமாகவே கைப்பற்றப்படவேண்டும். தற்போது இவர்கள் மகாத்மா காந்தியின் அஹிம்சை வழியில் நடப்பதாகக் கூறுவதும் தவறானதே.

இவர்கள் உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்து வந்தாலும், இடைக்கால நிர்வாக சபைக்கு தமது அங்கத்தவர்களின் பெயர்களைத் தெரிவு செய்தாலும் அவசியமேற்படும் போது இராணுவ நடவடிக்கை தவிர்க்கமுடியாதது என்ற நிலையிலும் புலிகள் மறைமுகமாக ஈடுபட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளது. [சி]

### முன்னாள் வீரர்கள் பங்குபற்றிய

## ஒருநாள் போட்டித்தொடரில் இந்திய அணி தோல்வி

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டக்காரர்களிடையே இந்தியாவில் நடைபெற்ற 40 ஓவர் கொண்ட3 ஒருநாள்போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணி 2—1 என்ற ரீதியில் வெற்றி பெற்றது

முதல் போட்டியில் இந்திய அணி நன்கு விக்கெட்டுகளாலும் இரண்டாம் மூன்றும் போட்டிகளில் பாகிஸ்தான் அணி முறையே 2விக்கெட்டுகளாலும், 4 விக்கெட்டுகளாலும் வெற்றிபெற்றது.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற 3 ஒரு நாள் போட்டிகளிலும் இரு அணிகளிலும் பங்குபற்றிய வீரர்கள் நாற்

[ ம் பக்கம் பார்க்க]

### டிக்ஸிற்-பிரபா சந்திப்பு

## விளக்கமளிக்க இருதரப்பும் அவகாசம்

[கொழும்பு]

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரன் கோரியுள்ள விளக்கங்கள் இன்னும் இரு தினங்களுக்குள் அவருக்கு தெரிவிக்கப்படுமென்றும், எமக்கான விளக்கங்களை திரு. பிரபாகரன் இன்று தெரிவிப்பாரென தாம் எதிர்பார்ப்பதாகவும் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் தெரிவித்துள்ளார்.

இவ் விளக்கங்களையடுத்து அடுத்த சில தினங்களில் வடக்கு- கிழக்கில் அமைதி ஏற்படுமென்றும் திரு. டிக்ஸிற் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 13 நாட்களாக சாகும்வரை உண்ணாவிரதமிருந்து மரணமடைந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. திலீபனின் மரணம் குறித்து மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. பி. சிதம்பரம் தனதுஆழ்ந்தகவலையைத் தெரிவித்துள்ளார். திரு. திலீபனின் மரணம் துயரகரமானது. அதைத் தவிர்த்திருக்க முடியுமென்றும் கூறினார். [சி]

## காலமானார்

(யாழ்ப்பாணம்)

பரமேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் பதில் அதிபர் திரு. அ. பரநிருபசிங்கம் காலமானார்.

பிரபல சமூகசேவையாளரான திரு. அ. பரநிருபசிங்கம் தொழில்முன்னிலை பாடசாலைச் சேவைக்கால கல்வி ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார். [வா]

## பாராளுமன்ற தாக்குதல் சம்பவம்: மேலும் ஒரு பாராளுமன்ற ஊழியர் கைதானார்

[கொழும்பு]

பாராளுமன்றக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் ஒரு பாராளுமன்ற ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பதினைந்தாக அதிகரித்துள்ளது.

இதுவரை கைது செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் ஜே வி. பியுடன் நெருங்கிய தொடர்புகள் உள்ளனவென குற்றப்புலனாய்வுத்துறை பிரதிப்பொலிஸ் மா அதிபர் பிராஸ் டி சில்வா தெரிவித்தார். தலைமறைவாகியுள்ள மற்றுமொரு பாராளுமன்ற ஊழியரான அஜித் குமார் ரணசிங்க இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார்

இக்குண்டுத் தாக்குதல் சம்பவத்திற்குப் பொறுப்பானவர் குறித்து தகவல் கொடுப்பவர்களுக்கு பத்துலட்சம் ரூபா சன்மானம் வழங்க அரசு முன்வந்துள்ளது

## கண்டி — யாழ்ப்பாணம் பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

யாழ் கோண்டாவில் சாலையால் சிறிதுகாலம் செயற்படுத்தாது இருந்த கண்டி-யாழ்ப்பாணம் பேருந்து சேவை மீண்டும் இன்று திங்கட்கிழமை முதல் யாழ் பேருந்து நிலையத்திலிருந்து செயலாற்றப்படும்

இச்சேவை தினமும் காலை 6-45மணிக்கு யாழ் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு மாலை 3-30மணிக்கும் 4-00 மணிக்குமிடையில் கண்டியைச் சென்றடையக் கூடியவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது மீண்டும் இச்சேவை மறுநாட் காலை 7-15 மணிக்கு கண்டியில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு மாலை 4-00, 4-30 மணிக்குமிடையில் வந்துசேரக் கூடியதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டிக்கு அப்பால் உள்ள மக்கள் இச்சேவையை பயன்படுத்தக்கூடிய விதமாக ஏதாவது ஆலோசனைகள், மாற்றங்கள் தெரிவிக்கவிரும்புபவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை முகாமைக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## நாடுதிரும்பும் அகதிகள்

(மன்னார்)

தென்னிந்தியாவிலிருந்து கடந்தவாரம் தலைமன்னார் இறங்குதுறைக்கு 809பேர் வந்துள்ளார்கள் இவர்களில் 310பேர் யாழ்ப்பாணம், 77 பேர் மட்டக்களப்பு, 112 திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மிகுதியானோர் மன்னாரைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் மன்னார் அரச அதிபரின் ஏற்பாட்டால் தத்தம் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

# வரி விளம்பரம்


## விற்பனைக்கு

பாவித்த பனை மரங்கள், வளைகள், சிலாகைகள் உடன் விற்பனைக்குண்டு. M தியாகராஜன். 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-1352)

திருமண பட்டுப்புடவைகள் காஞ்சிபுரம், ½X½, சில்க் அன் சிபோன், கொட்டன், காஞ்சிபுரம் போன்ற நவீன சேலை வகைகளை பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. சி-0130

$2\frac{3}{4}$ பரப்பு காணியுடன் எல்லாவசதியும் அமைந்தவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ச. ஜெயறட்டினம் ''இலக்குமிவாசா'' கூளாவடி லேன், ஆனைக்கோட்டை. சி-1402

ரொபி, இனிப்பு செய்யும் கையால் இயங்கும் மெசினும் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி V. கனகராசா, நவாலி கிழக்கு. மானிப்பாய். சி-1404

நவாலியில் அரசடிச்சந்திக்கு அருகாமையில் நல்லதண்ணீர் கிணற்றுடனும், மற்றும் சகல பிரயோசனமுள்ள மரங்களுடனும் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும். க. கணபதிப்பிள்ளை, சுதுமலை மேற்கு, மானிப்பாய். (சி 1434)

Hisex பிறவுண் 40 நாள் பேட்டுக்குஞ்சுகள் (தடுப்பூசி ஏற்றப்பட்டது, சொண்டு வெட்டப்பட்டது) விற்பனைக் குண்டு. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (சி 1441)

Bairha Farms Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் Hy-Line வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் 2ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (சி 1442)

Honda CB 250 N புதிய மொடல் Honda MB 5 பதிவு செய்யப்படாதது தொடர்பு: (செல்லத்துரை சட்டம்பியார் வளவு செல்லத்துரை பாடசாலைக்கு அருகாமை) சுதுமலை வடக்கு, மானிப்பாய். சி-1298

G. C. E. O/L பரீட்சையில் ஆங்கில மொழியில் விசேட சித்திபெற வழிகாட்டி. 100 கட்டுரைகளும் கடிதங்களும் (100 Model Essays & Letters) அஸ்ரன் வெளியீடு விலைரூபா 47-50. பூபாலசிங்கம், சிறீலங்கா, சுப்பிரமணியம் புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். சி-1089

$2\frac{1}{2}$ பரப்பு சற்சதுரக்காணி சுத்துமதில் போடப்பட்டுள்ளது. வீடு கட்டுவதற்குகந்த காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S. S. சோமசுந்தரம், அரிசி ஆலை, பருத்தித்துறை. சி-1346

பாவித்த வீட்டுத்தளபாடங்கள், கட்டில் மெத்தைகள், Show case, கண்ணுடி மேசைகள், நாஷனல் கலர் 20''[237] மொடல் புதிய T V, பித்தளை வாஸ். குத்து விளக்குகள், சில்வர் பொருட்கள், Baby Cot, Filter, கிளாஸ் வகைகள் மற்றும் பல. மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி-1353]

## விற்பனைக்கு

திருநெல்வேலி/ யாழ் பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் $1\frac{1}{4}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு விபரங்கட்கு: A B. சபாநாதன், 14, மணல்தறை லேன், கந்தர்மடம். சி-1431

சகலவிதமான அழகிய வண்ண மீன்களுக்கும் கண்ணுடித் தொட்டிகளுக்கும் சகல தொட்டி உபகரணங்களுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும். இந்திரா அக்குவா A C. ராஜக்கோன், 28, மத்திய மேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (குருநகர் தண்ணீர் தாங்கிக்கு கிட்ட) சி-1426

கூவர் வாசிங் மெசின் சைனீஸ் பெற்றோமாக்ஸ், சிங்கர், பிலிப்ஸ் குளிர்சாதனப் பெட்டிகள், புதிய நாஷனல் ரூ இன் வண் பிலெண்டர், அன்டர்லூட் ஆங்கில தட்டச்சு, போட்டபிள் தஞ்சாவூர் சுருதிப் பெட்டி, புதிய யசிச்கா M. G I. கமரா, சொனி சேவிங் செற், நிப்பொன் கலர் பூஸ்டர், ரூ இன் வண் றேடியோவும் கசட்டும் மொனோ விற்பனைக்குண்டு. தொடர்பு: ரொலிவொயிஸ், என்ஜினியேஸ், 184 A நாவலர் வீதி, யாழ்ப்பாணம் சி-1403

## பயிற்சி

Computer programming (Basic) File-Handling. Project உட்பட முழுமையான பயிற்சிநெறி ஆரம்பம் 2-10-87 மேலதிகவிபரங்கட்கு Able Technical Studies, கே. கே. எஸ். வீதி, சுன்ணுகம், சேர்ச் லேன், சாவகச்சேரி. (சி-1392)

Radio & TV repairing சகலவிதமான றேடியோ மற்றும் B & W Colour TVக்கள் திருத்துவதற்கான பயிற்சிநெறி Wiring புதிய பிரிவுகள் ஆரம்பம் 2-10 87; Able Technical Studies, கே கே எஸ். வீதி, சுன்ணுகம். சேர்ச் லேன், சாவகச்சேரி. (சி-1393)

பொறிமுறைப் படவரைஞர் பயிற்சி யாழ் மாவட்டத்திலேயே எமது நிறுவனத்தில் மட்டுமே நடைபெறுகிறது. அனைத்து பொறிமுறைப் பிரிவினர்க்கும் அவசியமானது ஆரம்பம் 2-10 87. Able Technical Studies, கே. கே. எஸ் வீதி. சுன்ணுகம். சேர்ச் லேன், சாவகச்சேரி. (சி-1394)

## தேவை

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சைவ ஹோட்டலுக்குப் பெண் காசாளர் தேவை நேரில் வரவும். இல: 25, நவீன சந்தை, மேல்மாடி, யாழ்ப்பாணம். [சி-1355]

தோட்ட வேலையில் அனுபவமுள்ள Watcher தேவை. நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். 2-10-87ற்கு முன் காலை 9மணிக்கும் 12மணிச்கு மிடையில் நேரில்வரவும். வயது 45ற்கும் 60ற்கும் இடையில் விரும்பத்தக்கது, முகாமையாளர், யூனிபோஇன்டஸ்றீஸ் வேம்பன் வீதி, உரும்பிராய் சி-1415

உருக்குத் தளபாடங்கள், கேற் கிறில், வேலைகளில் அனுபவமுள்ளவர்களும், பயிலுநர்களும் உடன் தேவை. சகல சான்றுப் பத்திரங்களுடனும் விண்ணப்பத்துடனும் 2 10-87 இற்குமுன் காலை 9 மணிக்கும் 12மணிக்குமிடையில் நேரில் வரவும். முகாமையாளர், யூனிபோ, வேம்பன்வீதி, உரும்பிராய். சி-1414

## பயிற்சி

தமிழ் இலக்கண விளக்க மூலம் ஆங்கிலமொழி (இலக்கண அமைப்புடன்) வெற்றிகரமான 3 மாத பூரண மொழி பயிற்சி திட்டம், இலகுவான துரிதமான புதிய பாணியில் தபால்மூலம் பயிற்சி O/L பல்கலைக்கழக மாணவர்க்கும், ஆங்கில மொழிப் பிரியர்க்கும் ஒரு வரப்பிரசாதம். 3 ரூபா முத்திரையுடன் விபரங்கட்கு விண்ணப்பிக்கவும். Xavier's English Tutory, 10A Cathedral St. Jaffna. சி-1409

## சேவை

Typewriters-தட்டச்சு இயந்திரங்கள் சிறந்தமுறையில், குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். Fudo Enterprises, 39/17, Power House Road, (3rd Lane) Jaffna. (சி-1399)

யாழ்ப்பாணத்தில் திருக்குடும்பக் கன்னியர்மடம், சுண்டிக்குளி, சென். ஜோன்ஸ் அக்கடமி, வேம்படி, மருத்துவக் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவிகளுக்கு உணவுடன் தங்குமிட வசதிகள் உண்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி-1410, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-1410

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த 'சுப்ப கனன்'' சேவை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது தரமான போட்டோ ஸ்ரற் பிரதிகள், றோனியோ, தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள் என்பன தாமதமின்றி செய்து கொடுக்கப்படும். சுப்ப கனன், இல. 13, நவீன சந்தை [மேல் மாடி] ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். சி-1429

# University of Jaffna.

Cetificate Course in Data Processing and BASIC Language Programming

APTITUDE TEST

The aptitude test which was scheduled to be held on 20 th September 1987, will be held on 4th October 1987 at 9-00 a. m.

Assistant Registrar.
Faculty of Science,
University of Jaffna.

A-2310

## கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி ஏலவிற்பனை

கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான மொறிஸ் நோமல் லொறி (24ஸ்ரீ8290 இலக்கம்) 14-10-87ம் திகதி காலை 10-00 மணிக்கு தலைமைக்காரியாலய வளவில் வைத்து ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் கேள்வி கேட்கவிரும்புவோர் ரூபா 1050/- தலைமையலுவலகத்தில் வைப்பாகச் செலுத்தவேண்டும். இதில் ரூபா 1000/-மீளப் பெறக்கூடிய வைப்பாகும். லொறி வாங்குபவர் அன்றைய தினமே பெறுமதியில் 20% வீதத்தை செலுத்தி ஒரு வாரத்துக்குள் மிகுதிப் பெறுமதியை செலுத்தி லொறியை எடுத்துச்செல்லல்வேண்டும்.

இ. பசுபதிப்பிள்ளை,
பொதுமுகாமையாளர்.

(எ 2309)


# அஹிம்சைப் போரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கப்படுவதுபற்றியும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுமில்லை.

வடக்கு-கிழக்கில் இடைக்கால அரசு எதுவும் உருவாகாத நிலையில் இலங்கை அரசு தனது அமைச்சரவை உறுப்பினர்களையும், பிரதிநிதிகளையும் இப்பகுதிகளுக்கு அனுப்பிவருகிறது புனரமைப்பு, புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கென வெளிநாடுகளின் உதவிகளை பெருமளவில் பெற்றும்வருகிறது. பெறும் முயற்சிகளிலும் பலர் உலகநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

இவ்வாறுன நிலைமைகளில் தமிழ்ப்பகுதிகளின் நிலைஎன்ன? தமிழர்களின்எதிர்காலத்திற்கு இவை எந்தவகையில் நன்மையளிக்கும்? இனிவரும் காலத்தில் இவற்றுல் ஏற்படப்போகும் விளைவுகளைக் கருத்தில் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழர் தரப்பில் ஒப்பந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்ட இந்திய அரசுக்கு கடந்த 13ம் திகதி உயர்ஸ்தானிகர் மூலம் ஐந்து அம்சக்கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து 24 மணித்தியாலத்துள் அதற்குப் பதிலளிக்குமாறும் வற்புறுத்தியது. தவறும் பட்சத்தில் சாத்வீகமுறையில் சாகும்வரை உண்ணுவிரதப்போராட்டத்தில் தாம் ஈடுபடவிருப்பதாகவும் தெரிவித்தது.

24 மணித்தியாலங்களுள் பதில் கிடைக்கவில்லை விடுதலைப்புலிகளின் அரசியல்பிரிவு பொறுப்பாளர் திரு. இ. திலீபன் கடந்த 15ம் திகதிசாகும் வரை உண்ணுவிரதத்தை ஆரம்பித்தார். மக்கள் ஆதரவுடன் இவ் உண்ணுவிரதம் தொடர்ந்தது. எனினும் இந்திய அரசு தரப்பிலிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை

போராட்டம் பல விதங்களில் விஸ்தீரணமடைந்தது.

வடக்கு-கிழக்கு எங்கும் உண்ணுவிரதங்கள், மறியல் போராட்டம் கடையடைப்பு, ஹர்த்தால், ஆர்ப்பாட்ட ஊர்வலம், இன்னும் பலவிதங்களில் இப்போராட்டம் தொடர்ந்த போது திலீபனின் உடல்நிலை மோசமடைய ஆரம்பித்தது. மக்கள், வேறுபாடுகளை மறந்து 5 அம்சக்கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து தமது ஆதரவை வழங்கினர்

தமிழ்ப்பகுதியில் நிலைமைகள் மோசமடைவதையும் இந்திய எதிர்ப்பு உணர்வு இப்பகுதிகளில் எழுவதையும் உணர்ந்த இந்திய அரசு தமது பிரதிநிதியாக முதலில்ராணுவ அதிகாரி பெர்ணுண்டஸ்ஸைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த அனுப்பினர். ஆனுல் அவரது கோரிக்கை புலிகளிடமிருந்து மிகுதி ஆயுதங்களைக் கைப்பற்றும் முயற்சியாகவே அமைந்தது. புலிகளின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. புலிகளும் அவரது கோரிக்கையை நிராகரித்தனர். இதையடுத்துக் கடந்த 18ம் திகதி திரு ஜே. என் டிக்ஸிற் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திஞர். பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன. அங்கு உண்ணுவிரதத்தைக் கைவிடுமாறு வலியுறுத்தப்பட்டது. அவரின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

26ம திகதி மீண்டும் இதுபற்றிப் பேச்சுக்கள் நடத்த வருவதாக திரு டிக்ஸிற் விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்தார். பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள பலாலி முகாம் சென்றனர். திரு டிக்ஸிற்றை சந்தித்தனர். இடையில் வந்த அறிவித்தல் திரு. திலீபன் காலமாஞர் என அறிவித்தது. பேச்சில் கலந்து கொண்டவர்களிடையே பெரும் அதிர்ச்சியும் கவலையும்.

திரு திலீபனிற்கு மரணம் சம்பவித்தால் இந்திய அரசே பொறுப்பு என விடுதலைப் புலிகள் வலியுறுத்தியிருந்தனர். ஆனுல் இதற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பென இந்திய அரசு வலியுறுத்தியது எனினும் யார் பொறுப்பென மக்களை உணரவைத்து தனது அஹிம்சாக்கொள்கைக்காக திரு. திலீபன் மரணமாஞர்.

தான் இறந்தாலும் விடுதலைப் புலிகளின் கொள்கையை, கோரிக்கையை நிறைவேற்றுமாறு 18ம் திகதி காலை மக்களுக்காற்றிய இறுதி உரையில் தெரிவித்தார். ஈழப் போராட்ட வரலாற்றில் விடுதலைப் புலிகள் சார்பில் 650 போராளிகள் ஆயுதப் போரில் வீரமரணமடைந்துள்ளனர். அஹிம்சைப் போராட்டத்தில் முதல் வீரஞக திரு. திலீபன் 26ம் திகதி காலை வீரமரணமடைந்தார்.

தொகுப்பு: சிவகணேசன்


## 31-ம் நாள் நினைவஞ்சலி



திரு. N K பழனி
(Retired Police Inspector)

தோற்றம்: 09-01-1912
மறைவு: 30-08-1987

அன்னரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

(சி 1328)


## முன்னுள் வீரர்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுவயதைக் கடந்தவர்கள் என்பதும் போட்டியில் கலந்து கொண்ட 12 வீரர்கள இரு அணியின் முன்னுள் தலைவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அடுத்த போட்டித் தொடர் நவம்பர் மாததத்தில் நடைபெறும். (சி)


## யூனியன் கல்லூரி-தெல்லிப்பழை
## ஆண்டு 6
## பிரவேசப் பரீட்சை-1988

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி 15-10-1987. ரூபா 10/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தையும், ஏனைய விபரங்களையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். வேறு விண்ணப்பப் படிவங்களில் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அதிபர்.

[சி-1443]

# 'ஜே. ஆர். கொலைமுயற்சியின் சூத்திரதாரி சி. ஐ. ஏ.!"

## எஸ். டி. பண்டாரநாயக்கா சாடுகிறார்

[கொழும்பு]

'ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின்மீது பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி அமெரிக்காவின் 'சி. ஐ ஏ.' புலனாய்வு ஸ்தாபனமே சூத்திரதாரியாகும்" என்று கம்பஹா எம்.பி.எஸ். டி. பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்புத் தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே திரு. பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: "1986ம் ஆண்டில் இலங்கைக்கான உதவியை அமெரிக்கா அரைவாசியாகக் குறைத்தது. இலங்கையில் தனக்குச்சாதகமான ஒரு தலைவரை பதவியில் அமர்த்த அமெரிக்கா எண்ணியிருந்தது 1959ம் ஆண்டில் முன்னாள் பிரமர் எஸ் டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவையும் அமெரிக்க சி. ஐ ஏ புலனாய்வு ஸ்தாபனமே கொலை செய்தது.

இப்பின்னணி காரணமாகவே சோவியத் யூனியனுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள இந்தியாவின் ஆதரவை ஜனாதிபதி நாடியுள்ளார் என்றார்.

# "தரமற்ற பாணை மக்கள் நிராகரிக்க வேண்டும்"

[அராலி]

"மக்கள் தரமானதும் உரிய நிறையையும் உடைய பாணைப் பெறுவதற்குரிய விதத்தில் பேக்கரிக்காரர்கள் சிறந்த பாணைத் தயாரிக்க வேண்டும் எல்லோரும் தரமற்ற நிறை குறைந்த பாணை ஒதுக்கிவிட்டு தரமான பாணைக்கொள்வனவு செய்யவேண்டும்"

இவ்வாறு யாழ. மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு எஸ் பற்குணம் சங்கானை லீலா பேக் ஹவுஸ் ஸ்தாபனத்தாரின் கிளைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் கூறினார்

கடந்த இரண்டு வருடகாலமாக சில பேக்கரிகள் தரத்திலும், நிறையிலும் குறைவான பாணையே விற்று வந்தன இவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது என்றும் அவர் கூறினார்.

சங்கானை அ. மி. த. க பாடசாலை அதிபர் திரு மு. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இவ்விழாவில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி. சாந்தினி சுப்பிரமணியம் கிளை ஸ்தாபனத்தை திறந்து வைத்தார்

தொழில் அதிபர் திரு. க. தருமரத்தினம் சங்கானை வைத்திய அதிகாரி டாக்டர் ரி. பகீரதன், திரு. ச. பூபால சிங்கம், திரு. வே. கைலாயபிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.


# ஏன்

## ஸ்ராண்டேர்ட் பினன்ஸில் முதலீடுசெய்ய வேண்டும்?



'தொடர்ச்சியான சிறந்த வட்டி வீதங்கள்'



'கால் நூற்றாண்டுக்கும் மேலாக அவர்களால் நிரூபிக்கப்பட்ட நம்பிக்கையான சேவை'



'வைப்பு ஆதாரத்தில் 40%க்கும் மேற்பட்ட தொகைக்கு நிறைகாப்பு.'



'குறைந்தபட்ச வைப்புத் தொகை ரூ.1000/- மட்டுமே. அத்துடன் மிகச் சிறிய முதலீட்டாளர்களுக்கும் மிகக் கண்ணியமான சேவை'



'எனது முதலீடுகளுக்குப் பாதுகாப்பும் எனக்கு உறுதியான வருமானமும்'

1987ம் ஆண்டுக்கான வட்டி வீதம்

| வைப்புக்கள் | 3 ஆண்டுகள் | | 2 ஆண்டுகள் | | 1 ஆண்டு | | 6 மாதங்கள் | 3 மாதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முதிர்ச்சியில் | மாதாந்தம் | முதிர்ச்சியில் | மாதாந்தம் | முதிர்ச்சியில் | மாதாந்தம் | முதிர்ச்சியில் | முதிர்ச்சியில் |
| ரூ.200,000உம் அதற்கு மேலும் | 25% | 19% | 23% | 19% | 17% | 15% | 15% | 14% |
| ரூ.100,000உம் ரூ.200,000க்கு குறையவும் | 23% | 19% | 20% | 17% | 17% | 15% | 15% | 14% |
| ரூ.1,000உம் அதற்கு மேலும் | 22% | 18% | 19% | 16% | 17% | 15% | 15% | 14% |

நிதி நிலைமைத் தகவல்கள்

| | 1985/86 ரூபா | 1984/85 ரூபா | 1983/84 ரூபா |
|---|---|---|---|
| மூலதனம் | 1,700,000 | 1,700,000 | 1,700,000 |
| மூலதன ஒதுக்கீடு | 14,926,300 | 9,944,500 | 9,944,500 |
| வருவாய் ஒதுக்கீடு | 4,326,547 | 1,452,653 | 1,200,764 |
| மூலதனமும் ஒதுக்கீடும் | 20,952,847 | 13,097,153 | 12,845,264 |
| சேமிப்புகள் | 139,700,253 | 123,346,021 | 90,507,406 |
| கடன்கள் | 471,077 | 1,484,621 | 3,211,633 |
| சேமிப்பாளர்களுக்கு வட்டி வழங்கு முன் கிடைத்த லாபம் | 21,940,000 | 24,658,633 | 23,101,7?3 |
| சேமிப்பாளர்களுக்கு வழங்கிய வட்டி | 26,066,107 | 23,306,744 | 20,060,740 |
| வரிவிதிக்குமுன் கிடைத்த நிகர லாபம் | 2,873,894 | 1,351,888 | 3,041,023 |
| வரிவிதித்தபின் கிடைத்த நிகரலாபம் | 2,873,894 | 1,351,888 | 3,041,023 |
| ஆதாய பங்குவீதம் | — | 1,100,000 | 2,295,000 |
| | — | 65% | 135% |

இயக்குநர்கள்

எச் எல். த குரே– தலைவர்

மா சட்டத்தரணி (இன்னர் டெம்பல்) சட்டத்தரணி

F B I. M. (Eng) A C I (Lond.)

எம் வி தியாகராஜா, உப தலைவர்

F C M A F C I A A F B I M

பி ஞானசேகரம். செயலாட்சி இயக்குநர்

ஜே சி. ஆர் குரே

F C M A M B I M

பிரசன்ன எல குணவர்தன

J P U M A C I (Lond) A I Arb (Lond)

சட்டத்தரணி கூட ஆலோசகர் நொத்தாரிசு

பிரதான தொழில்கள்

தவணை கொள்வனவுக்கு நிதியளித்தல் குத்தகை மற்றும் கடன் நிதியளித்தல் வைப்புகளைச் சேகரித்தல் அடைமானக் கடன். இறக்குமதிக்கு நிதியளித்தல்

Minds/SF/30

# இன்றே நீங்களும் ஸ்ராண்டேர்ட் பினன்ஸில் முதலீடுசெய்ய வேண்டாமா?

நம்பிக்கையோடு முதலீடு செய்யுங்கள்

SFL ESTD.1959

## ஸ்ராண்டேர்ட் பினன்ஸ் லிமிட்டெட்

த. பெ. இல. 1644, 481, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 தொலை பேசி: 597111, 598411

1959 டிசம்பர் 31ல் கூட்டிணைக்கப்பட்டது.

1979ம் ஆண்டின் 27ம் இலக்க நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்திற்கு அமையப் பதிவு செய்யப்பட்டது. அடைமான அதிகாரச்சட்டம், நம்பிக்கைப் பற்றுச்சீட்டுகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றிற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையம்.

பாராளுமன்றத்திலிருந்து———பெஞ்சமின் இராசரத்தினம்

ரத்கம சோமரத்னவின் இறுதி உரை-----

# எதிர்க்கட்சி கொண்டாட்டம்!

# அரசதரப்பு திண்டாட்டம்!

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினமாச் செய்த எ . பி ஒருவரின் கடைசி உரையை நேற்றுமுன் தினம் பாராளுமன்றத்தில் கேட்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

இலங்கை-இந்திய சமாதன ஒப்பந்தம்பற்றிய அவருடைய வெளிப்படையான கருத்துக்களை இந்த இறுதி உரையில் அவர் அள்ளி வீசினர் என்று தான் கூறவேண்டும்

தமது பதவியை ராஜினமா செய்த ரத்கம எம். பி. திரு. அசோகா சோமரத்ன 1983ம் ஆண்டு மே மாதம் நடந்த இடைத்தேர்தலில் வெற்றியீட்டி பாராளுமன்றத்திற்கு தெரிவானர்

திரு சோமரத்ன முன்பு இலங்கை கிமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவராகக் கடமையாற்றியவர்.

அவர் நிகழ்த்திய அந்த இறுதி உரை வருமாறு:

இனப் பிரச்னையை முன்வைத்து இலங்கையில் கால் ஊன்றியுள்ள இந்திய இராணுவம் இனி என்றுமே இந்த நாட்டைவிட்டு வெளியேறப் போவதில்லை. நாம் இன்று எமது வெளிநாட்டுக் கொள்கைகளையும், சுதந்திரத்தையும் இழந்துவிட்டோம்.

இப்படியான ஒரு நிலையில் நான் தொடர்ந்தும் ஆளும் கட்சி உறுப்பினராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்க விரும்பவில்லை. அதனலேயே எனது பதவியை ராஜினமா செய்கின்றேன்.

இவ்வேளையில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆரவாரம் செய்து அவரது பேச்சை வரவேற்றனர்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவர் ஒரு கோழை, துணிவில்லாதவர் என்ற வார்த்தைகளை அள்ளி வீசினர்.

எனினும், சபாநாயகரின் அனுமதியுடன் திரு. சோமரத்ன தமது பேச்சைத்தொடர்ந்தார்.

இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுவதற்குமுன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதுபற்றி தெளிவாகக் கூறப்படவில்லை.

## இந்தியா எமது உள்விவகாரங்களில் தலையிடுகிறது

இந்தியா தமது நாட்டின் சிவில் நிர்வாக முறையையும், வான் எல்லைகளையும் மீறுகின்றது. அத்துடன் உள்விவகாரங்களிலும் தலையிடுகின்றது.

## சுதந்திரமும் இல்லை எல்லையும் இல்லை

எமக்கு இன்று சுதந்திரமும் இல்லை, இறைமையும் இல்லை. எல்லையும் இல்லை. தலைவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்று அரசியல் தீர்வாகமுடியாது. மக்களின் நம்பிக்கையைப் பெருது செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்தமும் நடைமுறைச் சாத்தியமாகாது. அதில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. எனவே தான் இதனை ஏற்றுக்கொண்டு இச்சபையில் இருப்பதைவிட வெளியேறுவது மேலானது என நினைக்கிறேன். அதனலேயே எனது பதவியை ராஜினமாச் செய்கிறேன்.

இந்தஒப்பந்தத்தால்நாம்இந்தியாவை சந்தேகத்துடனேயே பார்க்கிறோம். தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் சந்தேகத்துடனேயே பார்க்கிறோம்.

இலங்கையின் இனப்பிரச்னையை இந்தியா நன்கு பயன்படுத்தி நன்மையடைந்திருக்கிறது. இலங்கையின் இனப்பிரச்னையைத்தீர்ப்பதற்கு உப ஜனதிபதி ஒருவரை நியமிக்கும்படி இந்தியாவே கூறுகிறது இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இலங்கையில் ஒரு உப ஜனதிபதியை நியமிக்கக்கோருவதற்கு இந்தியாவுக்கு இருக்கும் அவசியம் யாது?

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் எம். பி.க்கள் ஐந்துபேரை அவர்களது பிரச்னையைப்பற்றி கதைப்பதற்கு புதுடில்லிக்கு அனுப்ப ஏற்பாடு நடந்தது. எமது முஸ்லிம் சமுகத்தவர்களின் பிரச்னையை எமது அரசாங்கமே பேசவேண்டும். இதனை இந்தியாவுக்கு தெளிவுபடுத்த வேண்டுமாயின் இலங்கை அரசாங்கத்தின் ஊடாகவே செயல்படவேண்டும்

தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நாம் பல மாநாடுகளை நடத்தினேம். அதில் தமிழ்மக்களின் நம்பிக்கையைப்பெறமுடியாது போயிற்று மக்களின் நம்பிக்கையுடன் செயல்படும் ஒப்பந்தம் தான் நன்மையைத்தரும்.

## பிரதேசசபைகள்மூலம் அரசியல் தீர்வு சாத்தியம்

வடக்கு கிழக்கு மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு பிரதமரின் பிரதேச சபைகளை அமுல்படுத்தவேண்டும் அதன் மூலமாகவே மக்களின் நம்பிக்கையைப்பெறவேண்டும். அதனூடாகவே அரசியல் தீர்வு காணமுடியும்.

## ஒப்பந்தம் பற்றி அரச எம். பி.க்களுக்கே தெரியாது

சமாதான ஒப்பந்தம் பற்றி நாட்டு மக்களுக்கு மாத்திரமல்லாது அரசாங்க எம். பிக்களுக்கும் கூட எதுவும் தெரியாது. அரசாங்கக்கட்சி எம். பிக்களின் குழுக்கூட்டத்தில் அதனை விவாதிக்க இடமளிக்கப்படவில்லை

இவ்வாறு அவர் பேசிமுடிந்ததும் கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா ஒழுங்கு பிரச்னை ஒன்றைக்கிளப்பினர்.

ரத்கம எம் பி. இங்கிருந்து வெளியேறலாம். ஏனைய எம். பி.க்களை அவமானப்படுத்தவோ, அவர்களைக் கோழைகள் எனறு கூறவோ அவருக்கு அதிகாரமோ உரிமையோ கிடையாது என்ருர் ரணில்.

## நாம் கோழையா?

எதிர்க்கட்சித்தலைவர் உட்பட எதிர்க்கட்சி எம்.பி க்கள்: நீங்கள அமருங்கள். வெட்கம்! வெட்கம்!

திரு ரணில்வி கிரமசிங்கா: ரத்கம எம். பி. எழுந்து பதில் கூறட்டும் அவர் கோழை. நாங்கள் கோழைகள் அல்ல.

எதிர்க்கட்சி எம். பி க்கள்: நீஙகள் அமருங்கள்.

இதன்பின் இருதரப்பினரிடையேயும் சரமாரியான வார்த்தைப் பிரயோகங்கள் ஏற்பட்டன. சிறிது நேரத்தில் சபை அமைதியானதும் ரத்கம எம். பி. சபையைவிட்டுவெளியேறினர்.

இந்தச் சலசலப்பையடுத்து எம் பி க்களின் பாதுகாப்புக் குறித்துச் சபை தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று நீதி அமைச்சர் கலாநிதி நிஸங்க விஜேரத்தின தமது உரையில் குறிப்பிட்டார்:.

பாராளுமன்ற அங்கத்தவர்களின் பாதுகாப்புக்குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொளவதற்கு நிரந்தரக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டுமென்று அவர் சபையில் வலியுறுத்திக் கூறினர்.

நீதி அமைச்சர் பேசியபோது கூறியதாவது;

கடந்த மரதம் 18-ம் திகதி பாராளுமன்றக் குழு அறையில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்சம்பவம் தொடர்பாக தெரிவுக்குழு ஒன்று ஆராயவேண்டும்.

பாராளுமன்ற அங்கத்தவர்களின் பாதுகாப்பு பாராளுமன்றத்துக்குள் மாத்திரமல்லாமல், பாராளுமன்றத்துக்கு வெளியேயும் உறுதிசெய்யப்படவேண்டும்.

உத்தேச நிரந்தரக்குழு இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கான அலுவல்களை மேற்கொள்ள வேண்டும்.

பாராளுமன்ற அங்கத்தவர்களின் பாதுகாப்புக்கென அமர்த்தப்படும பாதுகாப்பு உத்தியோகத்தர்களைக்கூட விசாரணை செய்வதற்கான அதிகாரம் அந்தக் குழுவுக்கு வழங்கப்படவேண்டும்.

பாணந்துறை எம். பி. யின் உயிருக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டது. தெய்வாதீனமாக அவர் உயிர் தப்பிவிட்டார் எம். பி க்களின் பாதுகாப்புநிலை இன்று இவ்வாருக இருக்கிறது.

அன்று பாராளுமன்றக் குழு அறைக்குள் நடந்த அசம்பரவிதம் தொடர்பாக வெளியே பலவிதமபன வதந்திகள் அடிபடுகின்றன,

ஜனதிபதியினதும், பிரதமரினதும், அமைச்சர்களினதும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் திறமையற்றிருந்தனர் என்றும், போதிய பயிற்சி அளிக்கப்படாதவர்களாக இருந்தனர் எனவும், சந்தேகநபரை உடனடியாகப் பிடிப்பதற்கான போதிய பயிற்சியும், திறமையும் அற்றிருந்தனர் எனவும் பரவலானவதந்திகள் உலாவுகின்றன.

அத்துடன் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும்பாதுகாப்பு ஒழுங்கு முறைகள்திருப்தியற்றதாக ஸ்கொட்லண்ட்யார்ட்' கூட அதிருப்தியடைந்திருப்பதாக வதந்திகள் அடிபடுகின்றன. இவையெல்லாம் மக்கள் மத்தியிலிருந்து நீக்கப்படவேண்டும்.

---

## கிளிநொச்சியில் தொடர்மதிப்பீடு கருத்தரங்கு

[கிளிநொச்சி]

1987-ம் ஆண்டில் 10 ஆண்டு வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தொடர்மதிப்பீடு பற்றிய கருத்தரங்குகள் கிளிநொச்சி மாவட்டங்களில் நடைபெறும் என்று இப்பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம் மாதம் 30 திகதி காலை 8 00 மணிக்கு முல்லைத்தீவு கன்னியர்மட ஆரம்ப பாடசாலையிலும் மறுநாள் காலை கிளிநொச்சி புனித திரேசா மகளிர் மகா வித்தியாலயத்திலும் இக்கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்கள், சேவைக்காலப்பயிற்சி ஆசிரியர்கள், அதிபர்கள், உப அதிபர்கள், கொத்தணி அதிபர்கள், விசேட கல்வி அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளும் இக்கருத்தரங்களில் கொழும்பு பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் விசேட உரை நிகழ்த்துவர்.

---

## மருந்து தட்டுப்பாடு

(பலாலி)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் மனநோய்க்குப் பாவிக்கப்படும் மருந்து வகைகளிற்கு பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மன்னர், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து வரும் நோயாளர் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

---

## புதிய வீதி

[பலாலி]

பத்தாயிரம் ரூபா செலவில் சேந்தாங்குளத்தில் கடற்கரை வீதி என புதிய வீதிஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை உப அலுவலக நிதியிலிருந்தே பணம் ஒதுக்கீடு செய்து இவ்வீதி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வீதி அமைப்பு வேலையை வசந்தபுரம் பாரதி சனசமூக நிலையத்தினர் ஒப்பந்த அடிப்படையில் செய்துமுடித்தனர்.

---

## எய்ட்ஸை குணப்படுத்த மூலிகை

கம்பால1, செப் 26

'எயிட்ஸ்' நோயைக் குணப்படுத்தும் மூலிகை வைத்திய முறை ஒன்று உகண்டாவில் வெற்றி அளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

10 மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட புதிய மருந்தைக் கொண்டு சிகிச்சையளிக்கப்பட்ட 10 எயிட்ஸ் நோயாளர்கள் ஓரளவு குணமடைந்து வருகின்றனர் என்றும் இவர்கள் கம்பாலாவில் பல்கலைக்கழக ஆஸ்பத்திரி ஒன்றில் தொடர்ந்தும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

## புத்தகங்கள் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

"யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரி நூல்நிலையப் புனருத்தாரன வேலைகளையொட்டி மில்க்வைற்தொழிலதிபர் திரு. க கனகராசா ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்'' என்றுகல்லூரிஅதிபர் திரு. வி. அரியநாயகம் அண்மையில் நடந்த பாடசாலை அபிவிருத்திச்சங்கக்கூட்டத்திற்கு தலைமைவகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்

வைத்திய கலாநிதி இ.பாக்கியநாதனும் முன்னை நாள் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்டனரும் தலா ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை தந்து உதவியுள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்

பாடசாலையில் தற்போது கற்கும் மணவர்களின் பெற்ருேர் பழையமாணவர் நலன் விரும்பிகள் ஆகியோரிடம் இருந்தும் நன்கொடையாக புத்தகங்களை வாங்கி நூல்நிலையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானித்தது.

---

## வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவம்

[பருத்தித்துறை]

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 21ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 1ம் திகதி பாம்புத் திருவிழாவும், 2ம் திகதி மஹாகம்சன் போர் திருவிழாவும், 3ம் திகதி வேட்டைத் திருவிழாவும் 4ம் திகதி சப்பறத் திருவிழாவும்' 5ம் திகதி தேர்த்திருவிழாவும், 6ம் திகதி கடற் தீர்த்தத் திருவிழாவும், 7ம் திகதி கேணித் தீர்த்தத் திருவிழாவும் 8ம் திகதி அனுமார் மடையும் இடம்பெறும்.

---

## டெக் கடத்தல் முயற்சி முறியடிப்பு

[வேலணை]

நயினதீவுக்கு அண்மையில் ஸ்ரீலங்கா கடற்படையினர் படகு ஒன்றைக் கைப்பற்றி அதிலிருந்து கடத்தல் பொருள்கள் என சந்தேகிக்கப்படும் பல விலையுயர்ந்த பொருள்களையும் மீட்டுள்ளனர்.

இந்தியாவுக்குக் கடத்துவதற்காக எடுத்துச்செல்லப்பட்டதாகக் கருதப்படும் 20 டெக்குகளும் படகில் சென்றவர்களும் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

---

## மஹாஜன சம்பத சீட்டிழுப்பு

[கொழும்பு]

மஹாஜன சம்பத 188-வது சீட்டிழுப்பு இம்மாதம் 30ம் திகதி மாலை 6-00 மணிக்கு கொழும்பில் உள்ள தேசிய லொத்தர்சபை தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

---

## வேளாங்கண்ணி ஆலயத்திற்கு அடிக்கல்

[புங்குடுதீவு]

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் நோயானர்களின் நன்மைகருதி அன்னைவேளாங்கண்ணிமாதாஆலயத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் டாக்டர் யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது

நெடுந்தீவு பங்குத்தந்தை வண பிதா அருள்திரு லப்பே அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

---

## பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏக்கு பாராட்டு

(பண்டத்தரிப்பு)

"சமயப் பணிகளோடு சமூக சேவைத் திட்டங்கள் பலவற்றை கடந்த பலவருடங்களாகசெயல்படுத்தபொதுநலத் தொண்டாற்றிவரும் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. யினை பாராட்டாமல் இருக்க முடியாது. அடுத்த ஆண்டில் தமது வெள்ளி விழாவை கொண்டாடவிருக்கும் இந்த வை எம். சி. ஏ யின் சேவைகள் எதிர் காலத்தில் மேலும் சிறப்புற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை.''

இவ்வாறு பண்டத்தரிப்பு வை எம் சி.ஏ.சுமார் மூன்று லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட புதிய மாடிக் கட்டிட திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்ச ஆதீன முதல்வர் அதி. வண. டி. ஜே அம்பலவாணர் குறிப்பிட்டார்.

வை. எம். சி. ஏ. தலைவர் சு. இரத்தினவேல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் உரையாற்றுகையில் 'அகதிகளாக இப்பகுதிக்கு தங்கள் வீடு வாசல்களை இழந்து இங்கு தஞ்சமடைந்த மக்களுக்கு பண்டத்தரிப்பு வை. எம். சி ஏயினர் ஆற்றிய உதவிகளை மறந்துவிடமுடியாது என்ருர்.

விழாவில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தலைவர் டாக்டர் அல்போன்சஸ் அத்தனசியார், பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையத்தலைவி அன்னை யூலாலி,பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மு. சுப்பிரமணியம் உட்பட பலர் உரையாற்றினர்கள்.

## உணவு கேட்டுக் கொள்ளை

[வேலணை]

"எங்களுக்குச் சாப்பாடு தருவீர்களா?" எனக் கேட்டுக் கொண்டு ஆயுதங்களுடன் வீட்டுக்குள் நுழைந்த கோஷ்டியொன்று தாலிக்கொடி, ரொக்கப் பணம் உட்பட பல பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றது".

இச்சம்பவம் வேலணையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதுபற்றித் தெரிவிக்கப்படுவதாவது:-

வேலணை 3ம் வட்டாரத்தில் வசிக்கும் ஒருவரின் வீட்டில் சம்பவதினமிரவு கத்தி, கிறனேட் போன்ற ஆயுதங்களுடன் நால்வர் கொண்ட கோஷ்டியொன்று, "இயக்கமொன்றைச் சேர்ந்த எங்களுக்குச் சாப்பாடு தருவீர்களா?" எனக் கேட்டனராம்.

வீட்டுக்காரர் வெளியேவர அவரைப்பிடித்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்து மனைவியையும இரு பெண்பிள்ளைகளையும் அறையொன்றினுள் போட்டுக் கதவையடைத்தனர். பின்னர் மூன்று தாலிக் கொடிகள் சங்கிலிகள் 22ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் உட்படப் பல பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இக்கொள்ளைச் சம்பவம்பற்றி புகார்செய்தால் பிள்ளைகளைக் கடத்துவோமென மிரட்டிவிட்டு இக்கொள்ளையர்கள் சென்றனராம்.

## உதைபந்தாட்டம்

(ஊர்காவற்றுறை)

சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின 29வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி திருவள்ளுவர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும், திருவளளுவர் விளையாட்டுக் கழகத்தினதும் அனுசரணையுடன் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் புங்குடுதீவு யங் ஸ்டார் வெற்றியீட்டியது.

## மயங்கியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கரந்தன் என்னுமிடத்தில் மதுபோதையிலிருந்த ஒருவர் மயக்கமுற்றதை அடுத்து கோப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிறிது நேரத்தில் மரணமடைந்துள்ளார்.

கரந்தனைச் சேர்ந்த மார்க்கண்டு விக்னேஸ்வரன் (வயது 27) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். (கு)


## யாழ். மத்திய கல்லூரி

## அனுமதி - 1988

ஆண்டு 6ம், 7ம் வகுப்புக்களிலுள்ள வெற்றிடங்கள் போட்டிப் பரீட்சைமூலம் நிரப்பப்படவுள்ளன. இவற்றுக்குரிய விண்ணப்பப்படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் [10/-] பத்து ரூபா செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்விண்ணப்பங்களை அதிபருக்கு அக்டோபர் மாதம் 20-ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். ஏற்கனவே விண்ணப்பித்தோரும் உரிய படிவத்தில் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

திரு. வே. பாலசுந்தரம்
அதிபர்.

யாழ். மத்திய கல்லூரி. [எ-2306



# இந்தக் கதி உங்கள் பிள்ளைக்கு ஏற்படவே கூடாது...

# போலியோ!



அன்பும் அமைதியும் பொங்கும் இந்நாட்களில், கொடிய போலியோ நோய், உங்கள் அன்புச் செல்வத்தை அங்கவீனர்களாக்கவோ அவர்களுக்கு உயிராபத்து விளைவிக்கவோ நீங்கள் காரணமாக இருக்க வேண்டாம்.

நோய் நொடியற்ற வாழ்வு ஒவ்வொரு பிள்ளையினதும் பிறப்புரிமை. அதனை அவர்களுக்கு அளிப்பது பெற்றோராகிய உங்களுடைய முதற் கடமை.

உங்கள் அருஞ்செல்வத்தின் பொன்னான வாழ்வைப் பாழாக்கி விடாதீர்கள். இலவசமாகவும் மிகச் சுலபமாகவும் பெற்றுக்கொள்ளக்கூடிய போலியோ நோய்த்தடுப்பு மருந்தை உரிய கால வேளையில் கொடுத்து இன்றே அவர்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளை அதன் வாழ்நாள் முழுதும் அங்கவீனமாகும் அல்லது உயிராபத்தை எதிர்நோக்கும் பேராபத்திலிருந்து அதனைக் காப்பாற்ற இதுவே ஒரே வழியாகும். இதனை நீங்கள் செய்யாது விட்டால் வேறுயார் தான் செய்வார்கள்?

இன்றே அண்மையிலுள்ள வைத்திய நிலையத்தை அல்லது சுகாதார ஊழியரை நாடுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு போலியோ நோய்த்தடுப்பு மருந்தைக் கொடுங்கள்.

**துரித தடுப்பு மருந்தேற்றல் தேசிய இயக்கம்**

சுகாதார அமைச்சு
யுனிசெப் நிறுவனம்

Grant BJK&E UNI 1162

**இன்றே உங்கள் பிள்ளைக்கு தடுப்பு மருந்தைக் கொடுங்கள்**
**தாமதம் செய்தால் தவிக்க நேரிடலாம்.**

## யா/மகாஜனக் கல்லூரி
### தெல்லிப்பழை

### 6-ம் ஆண்டு வகுப்பிற்கான
## பிரவேசப் பரீட்சை 1988

தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் மேற்படி பரீட்சை 24-10-87 சனிக்கிழமை நடைபெறும் தற்போது ஆண்டு ஐந்தில் கற்பவரும் 01-02-77 சகுப் பின் பிறந்தவருமான மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவத்தை கல்லூரி அலுவலகத்தில் பெற்று 08-10 87 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

பரீட்சைக் கட்டணமாக பத்துரூபா செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பெறவும்.

க நாகராசா
அதிபர்

[எ 2311]



உங்களின் நிறைவான சேவையிலே மனமகிழ்ச்சிகண்ட

## எம். ஜி. எம்.
## வீடியோ ஹோம்

மீண்டும் உங்களுக்கு திறமான தரமான நம்பிக்கையான படப்பிரதிகளை வழங்கிச் சேவையாற்ற

28—09—1987

திங்கட்கிழமை முதல் திறந்திருக்கும் என்பதை அன்பான உறுப்பினர்கட்கும், ஆதரவாளர் கட்கும், அன்பர்கட்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

## M.G.M. Video Home

28, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

சி-1405







# கோண்டாவில் கிழக்கில் ஒரு திருமால் ஆலயம்

இலங்கையில் விளங்கும்ஒரு சில திருமால் ஆலயங்கள் மிகப்புகழ்பெற்று இலங்குகின்றன. அத்தகைய ஆலயங்களில் ஒன்றுதான் கோண்டாவில் கிழக்கு அருள்மிகு வல்லிபுரநாதர் தேவஸ்தானம் ஆகும்.

அகழி ஒன்றில் கண்டெடுத்த தெய்வவுருவொன்றை இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னர் இவ்வூர் மக்கள் ஓலையால் வேயப்பட்ட ஒரு ஆலயமொன்றினுள் வைத்து மெய்யன்புடனும் முறைப்படி வழிபட்டுவந்ததனர். வல்லீயப்பர் என்ற திருநாமமிட்டு பூசித்த இம்மக்கள் இக்கண்ணனுக்கு நாளடைவில் ஒரு மடலாயம் அமைத்துச் சேவித்தனர்.

காலம் செல்லச்செல்ல இவ்வூர் மக்களின் பக்தி இவ்வாலயத்திறகு அறங்காவல் குழு ஒன்றை அமைத்து 1981ம ஆண்டு பாலஸ்தானம் செயது ஆலயம்புனரமைக்கப்பட்டது. கருவறை, விமானம் போன்றவை அமைக்கப்பெற்று மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது. இக்கும்பாபிஷேகத்தின 6 வது நாள் நாகமென்று நாதஸ்வர இசைக்கு மயங்கிய நிலையில் படமெடுத்து ஆடியமை தெய்வீக நினைவாக இன்றும் இம் மக்கள் மத்தியில் உள்ளது

பசுவின் பாலினை ஆலய அபிஷேகத்திற்குத் தரமறுத்த ஓர் அன்பரின் பசு அவருக்கே பால் தர மறுத்தமையால்அந்த அன்பர் இன்றும் இவ்வாலயத்திற்கு நிதமும் பால் வழங்கிக்கொண்டிருக்கிறார்.

எஸ்.கே.என்.தவராஜா

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன முறையாக அமையப்பெற்ற இவ்வாலயத்தின் மூர்த்தி சிறிதாயினும் அதன் கீர்த்தி வானளாவியது இங்கு வருடாவருடம் புதுவருடப் பிறப்பு, தசாவதார ஜெயந்திகள், குறிப்பாக கிருஷ்ண ஜெயந்தியும் உறியடி உற்சவமும், ஆழ்வார் ஜெயந்திகள் ஏகாதசித்தினங்கள் மஹோற்சவம் ஆகியவை இடம்பெறுவதால் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலிருந்தும் இங்கு வருகை தந்து எம்பெருமானின் அருட்கடலில்மூழ்கி தீராதநோயெல்லாம் தீர்த்தவண்ணம் செல்கின்றனர். இங்கு நவக்கிரக மண்டபம், ஆஞ்சநேயர் ஆலயம் போன்றவை சிறப்பாக அமையப்பெற்றிருக்கிறன்றன.

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது அனந்தசயன உற்சவம் ஆழ்வார் திருவிழா, சப்பறத்திருவிழா, ஆகியவற்றுடன் 01-10-87 அன்று ரதோற்சவமும் இடம் பெறுகிறது மறுநாள் தீர்தோற்சவம் நடைபெற்று. பூங்காவனத்திருவிழா ஆஞ்சநேயர் பொங்கலுடன் உற்சவம் நிறைவுறுகிறது.

தெல்லிப்பழை ஆயர்பாடி ஆழ்வார் ஸ்ரீ வேத மயில் வாகனம் உற்சவ தினங்களில் தினமும் மாலை இராமாயண விரிவுரை நிகழ்த்தி வருகிறார்.

## ஆசிரியர் பயிற்சி வகுப்பு

[மூதூர்]

மூதூர் கோட்டக் கல்வி அலுவலர் பிரிவில் அடங்கியிருக்கும் மூதூர் பகுதிப் பாடசாலைகளில் 4, 5 ஆம் ஆண்டுகளில் ஆரம்ப விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் கடந்த வாரம் மூதூர் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது

மூதூர்கோட்டக்கல்வி அலுவலகத்தின் கல்வி முகாமைத்துவப் பொறுப்புபிரிவுக் கல்வி அதிகாரிதிரு. கே. தங்கராசாவினல் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பயிற்சி வகுப்பில் கோட்டக்கல்வி அலுவலக அதிகாரிகளான ஜனாப் எஸ் எம். மக்கீன், திரு ஆ. குணராசரெட்ணம் ஆகியோர் சிறப்பு விரிவுரைகள் நிகழ்த்தியதுடன், விஞ்ஞான ஆசிரிய கல்வி ஆலோசகர் எம் எஸ் அமானுல்லா, ஜனாபா பி. எம் புகாரி [ஆசிரிய ஆலோசகர்] ஆகியோரர் தொடர்ந்து விரிவுரைகளை நடத்தினர்

50க்கும் அதிகமான ஆசிரிய, ஆசிரியைகள் பங்குகொண்ட இக்கருத்தரங்கு ஆண்டு 4. 5 இல் ஆரம்ப விஞ்ஞானம் கற்பிக்குமஆசிரியர்களுக்குப்பயன் அளித்தது குறிப்பிடத்தக்கது.


## பிரயாண ஒழுங்குகள்

### மத்தியகிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்புக்கள்

மற்றும்

### கிரேக்கநாட்டு கப்பல் வேலை வாய்ப்புக்களும்

எம்மிடம் உண்டு.

முழு விபரங்களுக்கும் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

அத்துடன்

★ பாஸ்போட் ★ பொன்ட் ★ ரிக்கற்றிங்

முதலியனவும் குறித்ததவணையில் செய்துதரப்படும்.

K. பாலகிருஷ்ணன்,
"கிருஷ்ண ட்ரவல்ஸ்"
நியூசக்தி ஸ்ருடியோ.
கண்டி வீதி, கிளிநொச்சி.

(சி 1380)



## அறிவித்தல்

# LANKA CEMENT LIMITED,

## KANKESANTHURAI.

### Tender No, LCL / TCBM / 01 / 87

பொதி நிரப்பு நிலையத்தில் (PACKING PLANT) இருந்து சீமெந்துப் பொதிகளை கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எமது உப களஞ்சியங்களுக்கு லொறி வண்டிகளில் ஏற்றிச்செல்லுதல்:-

**கேள்விப்பத்திரங்கள் சேர்க்கப்படும் திகதி நீடிப்பு**

மேற்படி கேள்விப்பத்திரங்கள் 07-10-87 மாலை 3-30 மணிக்குப்பின் விநியோகிக்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் 09-10-87 அன்று காலை 10-00 மணிக்கு முன் உதவி பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டகத்தில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 09-10-87 அன்று காலை 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

பிரதி பொதுமுகாமையாளர்,

## லங்கா சீமெந்து லிமிட்டெட்,

காங்கேசன்துறை.

ஏ 2307



## பிரயாண ஒழுங்குகள்

★ நோர்வே
★ லண்டன்
★ கனடா

கொழும்பிலிருந்து நேரடியாக ஒழுங்கு செய்து தரப்படும்.

30-9-87, 1, 2, 3-10-87ம் திகதிகளில் காலையில் நேரடியாக சந்தித்தால் விபரம் தரப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

சி. கனகநாயகம்,
பண்ணாகம்,
சுழிபுரம்.

[வடக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் இருந்து 150 யார் தூரத்தில் உள்ளது.]

(எ 2312)

அஹிம்சை பாதையின் தன் இனத்தின் சுதந்திரத்திற்காக தன் உயிர் நீத்த

தியாகி
இ திலீபனுக்கு

எமது
**கண்ணீர்
அஞ்சலியும்
வீரவணக்கமும்**

**குணம்
வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ 2313)

## 45 ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 28-8-1957
விண்ணில்: 15-8-1987
ஜமுனு வீதியைச் சேர்ந்த

**மயில்வாகனம்
பரமானந்தராசா
(ஆனந்தம்)**

அவர்களின் 45-ம் நாள் ஆத்மசாந்திக் கிரியைகள் 28-9-1987 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

தகப்பன், தாய்,
சகோதரர்கள்,
42, ஜமுனு வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(சி 1446)

# "விடுதலை வரலாற்றில் முக்கிய மைல்கல்"

## இ. தமிழர் ஆசிரியர் சங்கம் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

"தமிழீழத்தின் விடுதலைக்காக வீரவேங்கை திலீபன் ஐந்து கோரிக்கைகளை இந்திய அரசின்முன்வைத்து உண்ணுவிரதமிருந்து உயிரைத்தியாகம் செய்தமை தமிழீழத்தின் விடுதலை வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். திலீபனின் அஹிம்சை ரீதியான போராட்டத்திற்கு தமிழ் சமுதாயம் தலைவணங்குகின்றது" என்று இலங்கைத் தமிழாசிரிய சங்க பொதுச்செயலாளரால் வெளியிடப்பட்ட அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஓர் நல்லாசிரியன் பெற்ற புதல்வனின் உயிர்த்தியாகத்தால் ஆசிரியசமுதாயம் பெருமையடைகின்றது திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தம் மொழிவழித் தொழிற்சங்கங்களுக்குமிடையில்ஓர்நெருக்கமான இணைப்பை ஏற்படுத்திய ஓர் சாதனையாளர். திலீபனின் இழப்பு தமிழ்ஈழ விடுதலைப் புலிகளுக்கு மாத்திரமல்ல தமிழ் சமுதாயத்திற்கும் விசேடமாக மொழிவழித் தொழிற் சங்கங்களுக்கும் ஈடுசெய்யமுடியாத ஓர் இழப்பாகும்" என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திலீபன் எனும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செயல்வீரரான திலீபன் சிறந்தபேச்சாளன் என்பதைக் காட்டை அமைதிப்படையுடன் நடந்த உண்ணுவிரதத்தின்போது அறிந்துகொண்டேன் அவர் வாயில் உதிர்த்தது வார்த்தைகளா, அல்லது தீப்பந்தங்களா? அன்று குமுறும் எரிமலையானார். பொங்கும் பெருங்கடலானார். வாய் திறந்தபோதெல்லாம்: வார்த்தைகள் வரிசையாக வந்து கொண்டு இருந்தன. இளவயதிலே இப்படியான ஒரு பேச்சாற்றல் மிக்கவரைக் கண்டு பிரமித்துவிட்டேன். இப்படியான ஒருஆற்றமிக்கவரை தமிழினம்இழந்துவிட்டது. அவரின் இடத்தை எவராலும் நிரப்ப முடியாது.

வட்டமிடும் ஹெலி; வந்து விழும் ஷெல். வானில் சுற்றும் பொம்மர் தாக்குதலுக்கெல்லாம், மக்களோடு மக்களாக நின்று எதிர்நீச்சலடித்து, இன்னல்கள், இழப்புகள், துக்கங்கள், துயரல்களில் பங்கு கொண்டு 'மக்கள் தலைவனாக' விளங்கிய திலீபனைப் பறி கொடுத்தது, தமிழினத்திற்கு ஈடு இணையற்ற பெரும் இழப்பாகும்.

## நீதிமன்றக்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கள் இடம்பெற்றுள்ளன.

தச்சன்தோப்பு ரயில் நிலையம் முற்றாக எரிக்கப்பட்டு அங்கிருந்த சிறிய கட்டிடமும் சேதமாக்கப்பட்டுள்ளது.

நாவற்குழியில், ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரயில்வே அதிகாரிகள் பயணம் செய்யும் ரயில்பெட்டி தீயிடப்பட்டிருந்தது.

சுன்னாகம், மானிப்பாய், சங்கானைப் பகுதிகளிலும் அசம்பாவித சம்பவங்கள் இடம் பெற்றன. [மா]

## கண்ணீர் அஞ்சலி

தீரத் திரு மகனே
திலீபா
உன் தியாகம்
சிறந்ததையா-தீரத்

ஈழத் தமிழ் மோகம்
திலீபா
உன் உயிரைக்
குடித்ததையா-தீரத்

ஓர்மம் நிறைந்த
தமிழ் மகனே
திலீபா
உன் தியாகம் உலகம்
போற்றுமையா-
தீரத்

வாய்மை நிறைந்த
வள்ளலே திலீபா
உன் வாய் வலிமைக்கு
நிகர் இல்லையைய்யா
-தீரத்

தமிழ் ஆர்வம்
நிறைந்த உன்
செயல் திலீபா
தமிழன் நெஞ்சிலோர்
வீரத்தை
வளர்க்குதையா-
தீரத்

ஈழத்தின் தியாகச்
சுடரே திலீபா
உன் தியாகத்தின்
எல்லை
தமிழீழமாகுமையா
-தீரத்

உயர் வேகம் நிறைந்த
வேங்கையே திலீபா
உன் நாமம் ஒருகாலும்
மங்காது
பாருமையா-தீரத்

ஊரெழு பெற்ற
உத்தமி மகனே
திலீபா
உனை உள்ளத்தால்
என் குடும்பம்
போற்றுதைய்யா-
தீரத்

**தியாகி வேங்கை
திலீபனுக்கு**

பொன். சிவலிங்கம்
குடும்பத்தினரின்

**கண்ணீர்
அஞ்சலி**

சந்தை மேற்கு, வீதி,
மானிப்பாய்
(சி 1448)

# இந்திய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது இது அர்த்தமற்ற சாவு என இந்திய தூதர் கூறியிருக்கிறார். தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன உயிர்தப்பியிருப்பான் என்று சொல்லியிருக்கிறார் ஆனால் உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன என்பதை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும். எமது மக்களுக்கும், எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும், தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாய்ப்பூமியில் தம்மைத் தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும் - இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம் எமது மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்கு பொறுப்பளித்தோம்.

இதனையடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம் எனது மக்களாகிய உங்களுக்குத் தெரியும். தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல முடியாது முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்க சிங்களக் குடியேற்றம் துரிதகெதியில் தமிழ் மண்ணை கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது. அவசர அவசரமாக சிங்களஇனவாத அரசயந்திரம் தமிழ்ப்பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப் படையின் அனுசரணையுடன் சிங்கள அரச ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ள முயன்றது.

சிங்கள அரசுடன் உரிமை கோரிப்போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம் தான் எமது இனப்பிரச்சனையில் தலையிட்டது. பாரதம்தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளித்தது பாரதம்தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம்தான் எமது ஆயுதப்போராட்டத்தை நிறுத்திவைத்தது. ஆகவே. பாரத அரசிடம்தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவேதான் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக்கொண்டான்

நீராகாரம்கூட அருந்தாது மரணநோன்பை திலீபன் தழுவிக்கொள்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரே நாம் இந்திய தூதர் திரு. டிக்ஸிட்டுக்கு முன்னறிவித்தல் கொடுத்தோம். உண்ணுவிரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள்வரை ஒன்றும் நடைபெறவில்லை பதிலுக்கு இந்திய அரச ஆதிக்கத்தின் கீழுள்ள தொடர்பு சாதனங்கள், குறிப்பாக அகில இந்திய வானொலி எம்மீது விசமத்தனமான பொய்ப் பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டது திலீபனின் உண்ணுவிரதத்தை மிகவும் கேவலமாக கொச்சைப்படுத்தியது. ஒன்பதாவது நாள் இந்தியத் தூதர் இங்கு வந்தார்.

உருப்படியில்லாத உறுதிமொழிகளைத்தந்தார். வெறும் உறுதிமொழிகளை நம்பி எமது இனம் சாகும் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது உருப்படியான திட்டங்களை முன்வையுங்கள். எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள். அதுவரை உண்ணுவிரதம் கைவிடப்படமாட்டாது என்றேன் உங்களுக்கு திலீபனது உயிரில் அக்கறை இருந்தால், நீங்கள் அவனை வந்து பாருங்கள் எமது மக்களுக்கு முன்பு அவனிடம் உறுதிமொழிகளை கூறுங்கள், நாம் உண்ணுவிரதத்தை வபபஸ் பெறுகிறோம் என்றோம் அதற்கு இந்தியதூதர் மறுத்து விட்டார்.

நாம் உருப்படியான செயல் முறைத் திட்டங்களைக் கேட்க இந்தியா உறுதிமொழிகளைத் தருகிறது. நாம் விளக்கங்களைக் கேட்க இந்தியா கால அவகாசம் கேட்கிறது. நாம் கோரிக்கைகளை முன்வைக்க இந்தியா நிபந்தனைகளைப் போடுகிறது.

இந்த சூழ்நிலையில் நாம் போராட்டத்தை கைவிட முடியாது மாறாக போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும். தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட தேசிய ஒழுச்சியாக எமது போராட்டம புரட்சி வடிவம் பெறவேண்டும்.

முல்லைத்தீவ திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் விடுதலைப் புலி வீரர்கள் சாகும்வரை உண்ணுவிரதம் இருக்கிறார்கள் வடக்கு கிழக்கு அடங்கிலுமுள்ள தமிழ்பேசும் மக்கள அனைவரும் புலிகள் முன்னெடுக்கும் இந்த சாதவீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும்.

## மாவட்டத்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாகாணத் தலைவர்களின் மகாநாட்டின் முடிவுகளை திரு. டிக்ஸிற்றுக்கு அறிவிப்பார் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் நகரில் நேற்றுப் பகல் முழுவதும் ஒரே ஹெலி கொப்டர் இரைச்சலாக இருந்தது.

இந்திய விமானப்படையைச் சேர்ந்த யேற்படி ஹெலிகொப்டர்கள் மூலமாகவே விடுதலைப் புலிகளின் மாவட்டத் தலைவர்கள் யாழ் நகர் வந்திருக்கலாம் என்று அறியப்படுகிறது.

## திலீபனின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னேன்" என்று முல்லைத்தீவில் 5-வது நாளாக நீராகாரம் எதுவுமின்றி உண்ணுவிரதம் இருந்துவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் திருச்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.

சோர்வுற்ற உடல்நிலையில் இருக்கக்காணப்பட்ட இவர், நேற்று உண்ணுவிரத முன்றலில் திரண்டிருந்த மக்கள் முன்னிலையில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கும் சகல கிராமங்களிலிருந்தும் மக்கள் ஆயிரமாயிரமாகத் திரண்டுவந்து இரவு பகலாக அடையாள உண்ணுவிரதத்தையும மேற்கொண்டனர்

நேற்று சிலாவத்தைப்பகுதியிலிருந்து மூவாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்களும், பாடசாலை, மாணவ மாணவிகளும், தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களும, கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் பேரணியாகத் திரண்டுவந்து இந்திய அமைதி காக்கும் படைப்பிரிவின் மேஜா டாக்டாவடம மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

## கண்ணீர் அஞ்சலி

பாரதத்தை
பெற்றுத்தந்த
மகாத்மா வழிநின்று-
ஈழத்தை பெற்றுத்தர
இன்னுயிர்
ஈந்துவிட்ட

**தியாக திலீபனுக்கு
கண்ணீர் அஞ்சலி**

ஒஸ்கா
விளையாட்டுக்கழகம்-
நூலகம்,
உரும்பராய்.
(சி 1/50)


## பாலேந்திரா எண்டர் பிரைஸ்

# தீபாவளிவாழ்த்துமடல்கள்

கண்ணைக் கவரும் புதிய வண்ண வண்ண டிசைன்களில் லித்தோவில் அச்சிடப்பட்டு உள்ளத்தைக் கவரக்கூடிய வார்த்தை ஜாலங்களுடன் வெளிவந்துவிட்டன.

## தீபாவளி வாழ்த்துக்கள்

விலை விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரிய மடிப்பு கார்டு (6 டிசைன்) 9½ X 7 | 100க்கு | ரூ. 600-00 |
| 2. | மத்திய மடிப்பு கார்டு (4 டிசைன்) | 100க்கு | ரூ 275-00 |
| 3. | சின்ன மடிப்பு கார்டு (4 டிசைன்) | 100க்கு | ரூ. 125-00 |
| 4. | லித்தோ மடிப்பு கார்டு (இரு பக்க படம் 1 டிசைன்) | 100க்கு | ரூ 200-00 |
| 5. | சுவாமி படங்கள் (8 டிசைன்) | 100க்கு | ரூ 190-00 |
| 6, | சினிமா படங்கள் (நதியா, பிரபு. ரகுமான், ரேவதி, அமலா போன்ற 9 டிசன்களில் இரு பக்கப் படங்கள்) | 100க்கு | ரூ. 225-00 |
| 7. | வார்னிஷ் படங்கள் (10 டிசைன்களில்) | 100க்கு | ரூ. 325-00 |
| 8. | அஞ்சல் அட்டை (15 டிசைன்களில்) | 100க்கு | ரூ 22-00 |

சொற்ப பிரதிகள் கைவசம் உள்ளன
தேவைகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**பாலேந்திரா எண்டர் பிரைஸ்,**
222/9, பேங்ஷால் வீதி, கொழும்பு 11.
(சி 1444)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 28-9-87

"உண்ணாவிரதமிருந்து நான் இறக்கநேரிடின்

# எனது கண்ணை ஒரு தமிழ் பேசும்மகனுக்குகொடுக்கவும்

## மட்டக்களப்பு மதன் கோரிக்கை!

(மட்டக்களப்பு)

"நான் இறக்கும்போது எனது கண்கள் பழுதடையாது இருந்தால் அவற்றை கண் பார்வையற்ற தமிழ்பேசும் மகன் ஒருவனுக்கு. அவன் தமிழனாக இருந்தாலென்ன, முஸ்லிமாக இருந்தாலென்ன தானம் செய்யவும்" என்று மட்டக்களப்பில் நீராகாரம் எதுவுமின்றி சாகுவரை உண்ணாவிரதமிருந்து வரும் மதன் தெரிவித்துள்ளார்.

இளர் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் உண்ணாவிரதமிருக்கிறார். அங்கு தமக்கு ஆதரவு தெரிவிக்க வந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

"உண்ணாவிரதத்தில் உறுதியாக இருக்கிறேன். மரணம் தான் முடிவென்பதும் நான் இறப்பதால் மக்களுக்கு விடிவேற்படும் என்பதும் எனக்குத் தெரியும்"

என் உயிர் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தாலும் என் உடம்பு இம்மண்ணிலிருந்து மறைந்தாலும் வேறொருவரிடமிருக்கும் எனது இரண்டு கண்களால் மலரவிருக்கும் தமிழ்ஈழத்தைப் பார்க்க விரும்புகிறேன். எமது போராட்டத்தில் நிச்சயம் வெற்றி நமக்கே" என்றார்.

இதேவேளை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் திலீபனின் மரணச்செய்தியால் சோகமயமாகக் காணப்படுகிறது. எங்கும் கறுப்புக்கொடிகள், தோரணங்கள் காணப்படுகின்றன. நேற்று ஞாயிறு விடுமுறை தினமாயினும் தபால்கந்தோர் போன்ற அரச அலுவலகங்களின் முன்னால் மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட அன்னையர் முன்னணியைச் சேர்ந்த பெண்கள் மதன் இருக்குமிடத்துக்கு ஊர்வலமாகச் சென்று மதனின் உண்ணாவிரதத்தை கைவிடும்படியும் அவருக்குப் பதிலாக தங்களில் பலர் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முன்வருவதாகவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### வலி. வடக்கில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களில் புலிக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன.

வீதிதோறும் வாழை, கமுகு பப்பாசி, தென்னை என்பன கட்டப்பட்டும் தோரணங்கள் காணப்படுகின்றன. பரவலாக ஒலிபெருக்கிமூலம் சோககீதம் இசைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது

இப்பகுதியில் உள்ள சகல பாடசாலைகளிலும் சோககீதம் இசைக்கப்பட்டு கறுப்புக் கொடி பறக்க விடப்பட்டுள்ளன

இப்பகுதிகளில் வாகன போக்குவரத்து மிகக்குறைவாக காணப்பட்டது. சில இடங்களில் வீதிகளல் மறிப்பு காணப்பட்டது.

அஞ்சலி தெரிவிக்கும் துண்டுப்பிரசுரங்களை இப்பகுதி பொதுஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள், பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் அரசு அலுவலகங்கள் வெளியிட்டுள்ளன.

அஞ்சலி செலுத்துமுகமாக கூட்டங்கள் நடத்துவதற்கு கிராமமக்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

கிராமங்களில் மூலைமுடக்குகள் எல்லா திலீபனின் படம் வைத்து, அழகாக அலங்கரித்து படத்துக்கு மாலையிட்டு ஊதுபத்தி கொளுத்தி விளக்குகள் வைக்கப்பட்டுள்ளன. மக்களும் சென்று பூக்கள்வைத்து தமது இறுதி அஞ்சலியைச் செலுத்துவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

திலீபன் இறந்த செய்தி கேட்டு சுன்னாகத்தை சேர்ந்த 76 வயதான சுப்பிரமணியம் பார்வதி என்ற வயோதிப மாது மயங்கி விழுந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### 10 பேர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதமிருப் போருக்கு பொட்டிட்டு உண்ணாவிரதத்தை ஆரம்பித்துவைத்தார்.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கச் செயலாளர் என். சிவசுப்பிரமணியம், பருத்தித்துறை பிரஜைகள் குழுச்செயலாளர் எஸ். கதிரேசு, பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச்சபை செயலாளர் எஸ். தர்மராஜா, பருத்தித்துறை கல்விவளர்ச்சிக்கழக அங்கத்தவர் பி. செல்வன் இன்பருட்டி கடற்றொழில்கூட்டுறவுச்சங்க உப-தலைவர் ஏ இரத்தினவேல், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபை உறுப்பினர் வி. தயாநிதி, பருத்தித்துறை புலோலி தெங்குப் பனம்பொருள் உற்பத்திவிற்பனவு கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை உறுப்பினர் கே சிவப்பிரகாசப், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்சங்க உறுப்பினர் வி க கணேசமூர்த்தி, அதே பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்சங்க மற்றொரு உறுப்பினர் ரீ. இரவீந்திரன் பருத்தித்துறை புலோலி தெங்குபனம்பொருள்உற்பத்து விற்பனவுக் கூட்டுறவுச்சங்க ஊழியர்சங்க உறுப்பினர் எஸ். கோபால் ஆகியபத்துப்பேருமே மூன்றுநாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்

இவ் உண்ணாவிரதிகள் முன்னிலையில் தென்புலோலியூர் பண்டிதர் எஸ் பரந்தாமன் தலைமையில் கருத்தரங் கொன்றும் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் ராஜீவ்-ஜே ஆர் ஒப்பந்தத்தின் விளைவுகள் பற்றியும், தமிழினத்தின் இன்றைய நிலைபற்றியும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

தற்பொழுது உண்ணாவிரதமிருக்கும் 10 பேரும் உண்ணாவிரதத்தை முடித்ததும் தொடர்ந்தும் அடுத்த 10 மக்கள் சேவையாளர்கள் உண்ணாவிரதமிருப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சாகும் வரை உண்ணாவிரதத்திற்கு ஆதரவுதெரிவித்து மேலும் பல பொதுமக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை கிராமங்களில் நடாத்தவும் தீர்மானித்துள்ளனர்.

### பருத்தித்துறையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திலீபனுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். அவர்கள் பூதவுடலைப்பார்த்து கதறி அழுதனர்.

பருத்தித்துறையில் சகல கடைகளும் நேற்று மூடப்பட்டிருந்தன. சந்தை கூடவில்லை போக்குவரத்து எதுவும் நடைபெறவில்லை. வீதிகள் எங்கும் தோரணங்கள் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சோககீதங்கள் இசைத்துக் கொண்டிருந்தன. எங்கும் சோகமயமாகவே காட்சியளித்துக்கொண்டிருந்தது

### அநுராதபுரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைதிப்படையினர் கைது செய்து இலங்கைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இவர் தற்போது அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இத்தகவலை ஈரோஸ் இயக்கம் வெளியிட்டுள்ளதுடன் இது குறித்து தனது கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்த ஈரோஸின் அறிக்கையில்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

18-9-87 அன்று இந்திய அமைதிப்படையினர் எமது மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த பகுதிஇராணுவப்பொறுப்பாளர் தோழர் அருளைகைது செய்து ஸ்ரீலங்கா பொலிஸாரிடம் ஒப்படைத்திருக்கின்றனர். சிங்களப் பொலிஸார் இவரை அநுராதபுரம் சிறைச்சாலையில் அடைத்து வைத்திருக்கின்றனர் சகலவிதமான நவீன ஆயுதங்களுடன் பகிரங்கமாக ஏனைய இயக்கங்கள் உலாவுகையில் ஆயுதங்களை ஒப்படைத்த நிலையில் சொந்தப்பாதுகாப்பிற்காக வேட்டைத்துப்பாக்கி ஒன்றைவைத்திருந்தது எவ்விதத்தில் குற்றமாகும்? என நாம் அறிய விரும்புகிறோம். தமிழ் பேசும் மக்களைக் காப்பாற்ற வந்ததாகக் கூறும் இந்திய இராணுவம் எண்ணற்ற இன்னல்களுக்கு மத்தியிலும் போராடி வந்த எமது போராளிகளையும், ஏனைய இயக்கப் போராளிகளையும் சிங்களப் பொலிசாரிடம் பிடித்துக்கொடுப்பதை வன்மையாக நாம் எதிர்க்கின்றோம். உடனடியாக எமது தோழரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்திய அமைதிப் படைத் தளபதி ஹர்கீத் சிங் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இக்கட்டத்தில் முக்கிய வினவொன்றை எழுப்ப விரும்புகின்றோம், அமைதிக்குப் பங்கம் விளைவிப்போர் என தமிழ் பேசும் மக்களைக் கைது செய்யவும், சுடவும் முற்படும் இந்திய அமைதிப்படையினர் சட்டம் ஒழுங்கை மீறி செயற்படும் சிங்கள இராணுவத்தினர், பொலிசார், சிங்களக் குண்டர்கள், ஊர்காவல் படையினர் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? என்பதை எமக்குத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### எம். ஜி ஆர் அதிர்ச்சி!

(நியூயோர்க்)

தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் இயக்க அரசியல்பிரிவுப் பொறுப்பாளர் திரு. இ திலீபனின் மரணம் தனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தற்போது அமெரிக்காவிலுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். திரு. திலீபனின் மரணம் குறித்து அதிர்ச்சியையும் வேதனையையும் வெளியிட்ட தமிழக முதலமைச்சர் திலீபனின் குடும்பத்தினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் தமது அனுதாபத்தை வெளியிட்டதுடன் திலீபனின் மரணம்துரதிர்ஷ்டவசமானது என்று தெரிவித்துள்ளார் [வா]

### யாழ் குடாநாடு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வீட்டுக்குவீடு சிறுவர்கள் திலீபனின் படம் வைத்து குத்துவிளக்கேற்றி அஞ்சலி செலுத்தியதை நேற்றிரவு அவதானிக்க முடிந்தது.

நேற்று அதிகாலை வீதித் தடைகள் போடப்பட்டிருந்த போதும் தலைவர் பிரபாகரனின் உத்தரவை அடுத்து வீதித்தடைகள் யாவும் முற்றாக அகற்றப்பட்டன.

சனநடமாட்டம் அதிகமின்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டபோதும் வீதிகளின் முக்கிய சந்திகளில் வைக்கப்பட்டிருந்த திலீபனின் படத்துக்கு முன்னால் சோகமே உருவாக மக்கள் நின்று அஞ்சலி செய்தவண்ணமிருந்தனர்.

திலீபனின் பூதவுடல்நேற்று வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் மக்களின் அஞ்சலிக்காக ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

இன்று ஊரெழுவில் அவரது வீட்டிலிருந்து காலை ஆறுமணியளவில் இறுதிஊர்வலம் புறப்படும். அவரது பூதவுடல்புன்னாலைக்கட்டுவன் சந்தி ஊடாக சுன்னாகத்தை அடைந்து கே. கே எஸ். வீதிவழியாக யாழ்ப்பாணம் வந்து தீவுப்பகுதிக்குச் செல்லும்.

தீவுப்பகுதியில், மண்டைதீவு பிள்ளையார் கோவில் அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராமாசவகர் காரியாலயம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்தியமகாவித்தியாலயம் புங்குடுதீவுசந்தையடி ஆகியவற்றுக் ஊடாகச்சென்று ஊர்காவற்றுறை செபஸ்தியார் கோவிலடியை சென்றடையும். அங்கிருந்து பின்னர் யாழ்ப்பாணம் நகரை வந்துசேர்ந்து மானிப்பாய் வழியாக சுதுமலையை இறுதியாக அடையும். சுதுமலையில் அமரர் திலீபனின் பூதவுடல் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும். அங்கு அஞ்சலிக்கூட்டம் மாலை 4 மணியளவில் இடம்பெறும். இக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் உரைநிகழ்த்துவர்.

அம்மேடையிலேயே திலீபனின் பூதவுடலை மருத்துவக் கல்லூரிக்கு கையளிக்கும் நிகழ்ச்சியும இடம்பெறும்.

இன்று குடாநாடு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கை தெரிவித்துள்ளது

## மரண அறிவித்தல்

### திரு. துரை வன்னியசிங்கி
### [மிருகவைத்தியர்] B. V. Sc.

திரு. துரை வன்னியசிங்கி காலமாகிவிட்டார். இவர் திருமதி சந்திராவின் அன்புக்கணவரும் கஜேந்திரன் [ஜேர்மனி), ஜெறின் [ஜேர்மனி] நீலியா [2-ம் வருடம் பௌதிகவிஞ்ஞானம் யாழ். பல்கலைக் கழகம்] ரெறின் [யாழ் பல்கலைக் கழகம்] ரெஷியா [திருக்குடும்பக் சன்னியர் மடம்]. அன்ரனஸ் யூட் [சம்பத்திரிசியார் கல்லூரி], ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அவர்ன் பூதவுடல் இன்று (28-9-87) திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

மனைவியும் பிள்ளைகளும்.

இல. 6. கோவில் வீதி, யாழ்ப்பாணம். சி-1449

### இராமநாதர் குமாரவேலு

காரைநகர் கருங்காலியை சேர்ந்த இராமநாதர் குமாரவேலு காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக்கணவரும், யோகம்மா, நவரத்தினம், குணரத்தினம், இராசரத்தினம் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சின்னத்துரை, லீலாவதி, பராசக்தி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். ஈமைக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 28-09-87 திங்கட்கிழமை[இன்று] காலை பத்துமணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீலகிரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கு. நவரத்தினம்,
கருங்காலி, காரைநகர்.

சி-1445

### ஆ. வீரசிங்கம்

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த திரு. ஆ. வீரசிங்கம் காலமாகி விட்டார். இவர் கமலம்மாவின் அன்புக் கணவரும் கிருபாதேவி (ஆசிரியை, ம ம. வித்தியாலயம் சாவகச்சேரி), கிருபானந்தமூர்த்தி, சத்தியானந்தமூர்த்தி (லண்டன்), இந்திராதேவி (சீமெந்துக்கூட்டுத்தாபனம்), சகுந்தலாதேவி (ஜேர்மனி) ஸ்ரீரங்கமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனும். பாலசுப்பிரமணியம் [சீமெந்துக்கூட்டுத்தாபனம்) மகேஸ்வரன் ஜேர்மனி], பரமேஸ்வரி, சிவயோகம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் கிருபனு, கீர்த்தனு, கௌத்தம், மாதங்கி ஆகியோரின் அன்பு பாட்டனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கள் (28-09-87) இன்று காலை 9-00 மணிக்கு "முருக வாசம்" சரசாலை மத்தி சாவகச்சேரியில் நடைபெறும். தகவல் தருபவர்: K பாலசுப்பிரமணியர்

ஏ-2314

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81 Eelanadu P O Box 49 Telegram, Eelanadu Telephone — 22389, 24136